வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 03.02.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 56 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## வடக்கில் படையினர் வைத்துள்ள 108 ஏக்கர் காணி இன்று விடுவிப்பு

கொழும்பு, பெப். 03

வடக்கில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள 108 ஏக்கர் காணிகள் இன்று வெள்ளிக்கிழமை விடுவிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விடுக்கப்படவுள்ள காணிகள் 197 குடும்பங்களுக்கு இன்று கையளிக்கப் படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட வுள்ளது.

75ஆவது சுதந்திர தினத்திற்கு 15

## 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தக்கூடாது!

### 3 மகாநாயக்கர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்து

கொழும்பு, பெப். 03

“நாட்டின் சுயாதீனத் தன்மை, ஒருமைப்பாடு, தேசிய பாதுகாப்பு தொடர்பில் பெரும் சிக்கல்களை தோற்றுவிக்கும் 13ஆவது அரசமைப்பு திருத்தத்தை எந்த வகையிலும் அமுல்படுத்தக் கூடாது” என்று மூன்று மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி தம்மை நேரில் சந்தித்தபோது எழுத்துமூலமாக வலியுறுத்தியுள்ளனர். 15

## இன்று வரை மின்வெட்டு இல்லை!

### மின்சார சபை உயர்நீதிமன்றில் உறுதி

கொழும்பு, பெப். 03

இன்று வெள்ளிக்கிழமை வரை, மின் தடை அமுலாக்கப்படமாட்டாது என இலங்கை மின்சார சபை, நேற்று உயர்நீதி மன்றில் உறுதியளித்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தாக்கல் செய்த மனு, நேற்று உயர் நீதிமன்றில் விசாரணைக்கு அழைக்கப் பட்ட சந்தர்ப்பத்தில், மின்சார சபை இந்த உறுதிப்பாட்டை வழங்கியுள்ளது. 15

## எரிவாயு விலை ரூ.800 வரை எகிறும்?

கொழும்பு, பெப். 03

எரிவாயுவின் விலை 800 ரூபாய் வரை அதிகரிக்கும் என்று லிட்ரோ எரிவாயு நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், 12.5 கிலோ எரிவாயு சிலிண்டர் 700 - 800 ரூபாய் வரை அதிகரிக்கவுள்ளது. இதேபோன்று, 5 15

# வடக்கு - கிழக்கில் நாளை ஹர்த்தால்!

## யாழ்., கிழக்கு பல்கலை மாணவர்கள் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 03

இலங்கையின் சுதந்திர தினமான நாளை சனிக் கிழமை தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு முழுவதும் பூரண கடையடைப்பு போராட் டத்துக்கு யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.



நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த அழைப்பு விடுக் கப்பட்டது. இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஐ தமிழர்களின் 15

## நாளைய பேரணியில் சகலரும் அணி திரள்க!

### மாணவர்கள் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 03

“தமிழ் மக்களின் கரிநாளான நாளைய தினம் வடக்கிலிருந்து கிழக்குக்கு எழுச்சிப் பேரணி ஆரம்பமாகவுள்ளது. இந்தப் பேரணியில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று”, யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

நேற்றைய தினம் யாழ். பல்கலைக் கழகத்தில் யாழ்ப்பாணம் - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கூட்டாக நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த அழைப்பை விடுத்தனர்.

அத்துடன், தமிழ் மக்களின் அபிலாசைகளான பொங்கு தமிழ் எழுச்சியனூடாக வலியுறுத்தப்பட்ட சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பவற்றை முன்னிறுத்தி 15

## அரச செலவுகளை 6 வீதத்தால் குறைக்குமாறு சுற்று நிருபம்!

கொழும்பு, பெப். 03

வரவு - செலவு திட்டத்தில் 2023ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள செலவுகளில் 6 வீதத்தை குறைக்குமாறு நிதி - பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் திட்டமிடப்பட்டுள்ள அரசின் உத்தேச வருமானத்தை திரட்டுதல் 15

## இனத்தை விற்பதற்கு கட்சிகளிடையே போட்டி

### கஜேந்திரகுமார் எம். பி.

வவுனியா, பெப். 03

ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ். ஆகியவை இந்தியாவின் முகவர்கள். கொள்கை என்ற பெயரில் இந்தியாவுக்கு அதிக விசுவாசமாக நின்று இனத்தை விற்பதே இந்தக் கட்சிகளிடையேயான போட்டி.

- இவ்வாறு கூறியிருக்கிறார் தமிழ்த் தேசிய 15

## கட்சிகள் பிளவுறுமாறு கருத்து தெரிவித்தோர்மீது நடவடிக்கை

### தமிழரசு கட்சி தலைவர் மாவை

யாழ்ப்பாணம், பெப். 03

கட்சிகளுக்குள் பிளவை ஏற்படுத்தும் முகமாக செயல்பட்ட தமிழரசு கட்சியின் உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் எதிர்வரும் 11, 12ஆம் திகதிகளில் மத்திய செயல்குழு கூடி அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் 15

## தமிழரசின் முடிவால் கட்சிக்குள் அதிருப்தி



### வெளிப்படுத்தினார் துரைராஜசிங்கம்

மட்டக்களப்பு, பெப். 03

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது என்ற தமிழரசுக் கட்சியின் முடிவு பிள்ளை யார் பிடிக்கப்போய் குரங்கான கதையாக முடிவடைந்து விட்டது என கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கவலை வெளியிட்டனர் என்று அந்தக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரும் கிழக்கு 15

## “அநுரவுடன் இணைய தயார்!”

கொழும்பு, பெப். 03

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவை மதிக்கிறேன். அவர் எனக்கு எதிரியல்ல என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் 15



உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023
தமிழ் தேசிய கூட்டமைப்பு
தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ் மக்களுக்கு ஞாபக மறதி கொஞ்சம் அதிகம்தான் என்றாலும் அதற்காக இப்படி மோசமாக நினைக்கக்கூடாது என்றார் நண்பர் ஒருவர்.

அவர் தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரமுகர். லண்டனில் வாழும் அவர், தமிழரசுக் கட்சியில் உள்ள சில புதிய தலைவர்கள்மீது அதிக நம்பிக்கை வைத்திருந்த ஒருவர்.

ஏன் இப்படிச் சொல்கிறீர்கள் என்று கேட்டேன்.

'அண்ணன் அமிர்தலிங்கம் ஒரு கூட்டத்தில் பேசியபோது தனக்குப் பிறகு மன்னார் சூசை தாசனை பேச அழைத்ததாகவும், அத்தனை தூரம் சூசைதாசன் சிறப்பான ஒரு தலைவர்' என்றும் அண்மையில் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊடக சந்திப்பு ஒன்றில் தெரிவித்திருந்தார்.

அதனைக் கேட்டுவிட்டு சற்று கோபமடைந்தவராகவே சொன்னார்,

'இவன் பாவி இப்படியொரு பொய்யைச் சொல்லுறானே. அதிலை வேற அண்ணன் அமிர்தலிங்கம்..' என்றார்.

அதே எம். பி. தன்னிடம் சில நாட்களுக்கு முன்னர் சொன்னதை ஞாபகப்படுத்திய அந்த லண்டன் பிரமுகர் தான் தனது வாழ்நாளில் அமிர்தலிங்கத்தை கண்டதும் இல்லை, அவரின் பேச்சை கேட்டதும் இல்லை என்று சொல்லியிருந்தாராம்.

'வேறு யாராவது இவருக்கு சொன்னதை, அவர் தானே நேரில் கேட்டதாக சொல்வது வழமைதானே.' என்று அவரை சமாதானப்படுத்த முனைந்தேன். அவருக்குக் கோபம் அடங்கியதாகத் தெரியவில்லை.

தமிழரசுக் கட்சி இந்த வருடம் இலங்கையின் சுதந்திர தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்க இருக்கின்றது. அந்த யோசனையை முதலில் அறிவித்தவர் மட்டக்களப்பின் எம். பி. சாணக்கிய. மட்டக்களப்பில் பெரும் போராட்டத்தை முன்னெடுக்க ஏற்பாடு நடக்கின்றது. அதனையொட்டி சுமந்திரன் எம். பி. அண்மையில் தனது ஊடக சந்திப்பிலும் விபரித்திருந்தார்.

இலங்கை சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளாகியும் தமிழர்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என்றும், சுதந்திர தின நாள் தமிழர்களின் வாழ்வில் கரிநாள் என்ற தொனிப்பொருளில் பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கை தமிழரசு கட்சி, போராட்டத்தை நடத்தும் எனவும் அவர் கூறினார்.

அதனைக் கேட்டதும் பழைய சம்பவம் ஒன்றுதான் ஞாபகத்துக்கு வந்தது.

அப்போதுதான் நல்லாட்சி அரசாங்கம் பதவியேற்றிருந்தது. இரண்டாயிரத்து பதினைந்து பெப்ரவரி நான்காம் திகதி நல்லாட்சி அரசின் முதலாவது சுதந்திர தின வைபவம். அதில் கலந்துகொள்ள வேண்டும் என்று சம்பந்தனும் சுமந்திரனும் தன்னிச்சையாக முடிவெடுத்தனர். அந்த முடிவும் விக்னேஸ்வரன் தமிழரசு தலைமையுடன் முரண்படுவதற்கு வித்திட்டிருந்தது என்பது வேறு சங்கதி.

இலங்கையின் சுதந்திர தினம் என்பது அன்று தொட்டு தமிழ் மக்களுக்கு கரிநாள்தான். ஆனால், அதனை ஏற்றுக் கொள்ள சுமந்திரனால் அப்போது முடியவில்லை.

அப்போது அவர் கூறியது அவருக்கு மறந்திருக்கலாம். ஆனால், தமிழ் மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

'இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிப்பதை ஒத்துக்கொள்ள முடியாது என கூறியிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், சுதந்திர தினத்தை எதிர்த்து வடக்கில் இடம்பெறும் போராட்டங்களை நிராகரிப்பதாகவும் கூறியுள்ளார்' என்று செய்தி எழுதியவர்கள் நாங்கள்.

இப்போது சுமந்திரன் கரிநாள் என்று அறிவித்திருக்கிறார். சிலவேளை நல்லாட்சி அரசின் ஆட்சிக்காலம் ஐந்து வருடமும் அவருக்கு இருந்த 'சுதந்திரம்' தமிழ் மக்களுக்கும் இருந்தது என்று நினைத்தாரோ தெரியவில்லை.

அதைவிட கொடுமை, இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருப்பவர் மட்டக்களப்பு எம். பி., அவர் சுதந்திர தினத்தை இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டே மகிந்த ராஜபக்ஷவுடன் கொண்டாடியவர்.

தமிழ் மக்கள் கொஞ்சம் ஞாபக மறதிக்காரர்கள்தான் என்று மேலே எழுதியிருந்தேன். ஆனால், அதற்காக இவர்கள் நினைப்பதுபோல, அவ்வளவு இலகுவில் மறந்துவிடக்கூடியவர்கள் அல்லர்.

ஆனாலும் கடந்த எழுபத்தி ஐந்து வருடங்களாக இலங்கையின் சுதந்திர தினத்தை கறுப்பு தினமாகவே அனுஷ்டித்து வரும் தமிழ் சமூகத்தின் சார்பில் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் எழுச்சிப் பேரணியையும் தங்கள் போராட்டத்துடன் இணைத்து தமது போராட்டமாகக் காட்டாமல் இருந்தால் சரி.!

**- ஊர்க்குருவி**

# யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளராக பிரதீபன்!

யாழ்ப்பாணம், பெப். 03

யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளராக யாழ்ப்பாணம் மேலதிக அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டார்.

யாழ். மாவட்ட செயலகத்திலேயே அவர் தனது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

முன்னர், யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளராக இருந்த இ. தவகோபால் ஓய்வுபெற்று சென்றமையை தொடர்ந்து அந்தப் பதவி வறிதாகியது. இந்நிலையில், அந்தப் பதவியை கடந்த ஜனவரி 23ஆம் திகதி முதல் தற்காலிகமாக வகித்து வந்தார்.



இந்நிலையில், அவரை யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளராக கடந்த 29ஆம் திகதி இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளர் ஜெனத் பிரித் பெர்னாண்டோ நியமித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோயில், திருத்தகத்தை உடைத்து 5 இலட்சம் ரூபாய், நகைகள் திருட்டு!

தென்மராட்சி, பெப். 03

சாவகச்சேரி காளி கோவில் மற்றும் அதனோடு அமைந்துள்ள வாகன திருத்தகம் என்பன உடைக்கப்பட்டு நகை, மற்றும் 4 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் பணம் என்பன களவாடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

காளி கோவில் உடைக்கப்பட்டு அம்மன் சிலைக்கு அணிவிக்கப்பட்டிருந்த ஒன்றரை பவுண் நகை களவாடப்பட்டதுடன், உண்டியலிருந்த சுமார் 35 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் அங்கிருந்த 3 மூடை அரிசி என்பன களவாடப்பட்டன.

இதேபோன்று, ஆலயத்தின் அருகே இருந்த வாகன திருத்தகம் உடைக்கப்பட்டு அங்கிருந்த நான்கரை இலட்சம் ரூபாய் பணம் திருடப்பட்டதாகவும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பிலும் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சஜித்துக்கு வடக்கு, கிழக்கில் வரவேற்பு

## சொல்கிறார் ரஞ்சித் மத்தும பண்டார

கொழும்பு, பெப். 03

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அமோக வரவேற்பு உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டிலுள்ள அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொண்ட ஒரே தலைவர் சஜித் எனவும்



தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு அமோக வெற்றி கிடைக்கும் எனவும், குருநாகல் மாநகர சபையின் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கே வெற்றி கிடைத்தது. இதன்படி, அந்த மாநகர சபையின் மேயராக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரே நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுடனோ, ஐக்கிய தேசியக் கட்சியுடனோ இணைந்துப் பயணிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார். (ஐ)

மதுபான விற்பனைக்கு எதிர்ப்பு:

# அதிகாரிகளின் உறுதியால் உண்ணாவிரதம் நிறுத்தம்!

கிளிநொச்சி, பெப். 03

மதுபான விற்பனையுடனான ஹோட்டல் திறப்பதற்கு எதிராக உண்ணாவிரத போராட்டம் நடத்தியவர் அதிகாரிகள் வழங்கிய உறுதிமொழிக்கு அமைய நேற்று தனது போராட்டத்தை நிறுத்திக் கொண்டார்.

கிளிநொச்சி - அக்கராயன் மேற்கில் மதுபான விற்பனையுடன் கூடிய ஹோட்டலை திறக்க பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இது தொடர்பில் பல தரப்பினருக்கும் மனுக்களை பொதுமக்கள் கையளித்தும் ஹோட்டல் திறக்கும் பணிகள் தடைப்படவில்லை.



இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை முதல் முருகையா இராசலிங்கம் என்பவர் உண்ணாவிரத போராட்டத்தை அப்பகுதியில் ஆரம்பித்தார்.

இந்நிலையில், நேற்றைய தினம் தமிழ் மக்கள் கூட்டணியின் கிளிநொச்சி பிரிவினர் மற்றும் பிரதேச சபை, பிரதேச செயலக அதிகாரிகள் அவரை நேரில் சந்தித்தனர். இதைத் தொடர்ந்து அவர்கள் அளித்த உறுதிமொழியின் பிரகாரம் அவர் தனது உண்ணாவிரத போராட்டத்தை நிறுத்தினார். (ஐ)

Eelanadu
03.02.2023 வெள்ளிக்கிழமை

பிலவ வருடம், தை 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ரணிலின் வாக்குறுதியாவது?

ரணில் விக்கிரமசிங்க தேசிய இனப்பிரச்னையை தீர்க்கும் முகமாக 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாகக் கூறி வருகின்றார். இதனைத் தொடர்ந்து பொருளாதார நெருக்கடியால் மக்களை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்த தென்னிலங்கை அரசியல் குழுக்கள் மெதுவாக முகம்காட்ட முயற்சிக்கின்றன. இதேவேளை, மகாநாயக்க தேரர்களும் 13உடன் வெளியில் எட்டிப் பார்க்கின்றனர். இந்த நிலையில் அனைவருக்கும் விளக்கமளிக்கும் முயற்சியில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருகின்றார்.

ரணில் விக்கிரமசிங்க ஒப்பீட்டடிப்படையில் விடயங்களை நன்கு புரிந்துகொண்ட ஒருவர்தான். இந்தப் பிரச்னைக்கு ஏதோவொரு வகையில் முற்றுப்புள்ளியிட வேண்டுமென்று அவர் விரும்புவது போல் தெரிகின்றது. ஆனால், கடந்த காலத்தில் ஏற்பட்ட சவால்கள்தான் இப்போதும் முகம் காட்டுகின்றது. 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசியவுடன் வழமைபோல் தென்னிலங்கையில் அடிப்படைவாத சக்திகள் எச்சரிக்கைகளை விடுகின்றன. பொதுவாகவே தமிழர் விரோத அரசியலை தங்களின் அரசியல் முதலீடாக கொண்டிருக்கும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தினால் நாடு பிளவடையும் என்றவாறான கதைகளுடன் சிங்கள மக்களை அச்சுறுத்தும் அரசியலை முன்னெடுக்க முயற்சிக்கின்றனர்.

13ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைக்கு வந்த காலத்திலிருந்து இன்றுவரையில் அதனை முழுமையாக அமுல்படுத்த முடியவில்லை. தமிழ்த் தேசிய தரப்புகளும் அதில் கரிசனை காண்பிக்கவில்லை. தமிழ்த் தேசிய தரப்புகளை பொறுத்தவரையில் 13ஆவது திருத்தச்சட்டம் போதுமானதல்ல ஆனாலும், இந்தியாவின் தலையீடுகளைக் கருத்தில் கொண்டு 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக இல்லாமலாக்கும் முயற்சிகளில் எந்தவோர் ஆட்சியாளரும் ஈடுபடவில்லை. ஆனால், வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் அதனை பலவீனப்படுத்தும் முயற்சிகளிலேயே தென்னிலங்கை ஆட்சியாளர்கள் ஈடுபட்டனர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு தமிழ்த் தேசிய கட்சிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றன. ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற அரசியல் தீர்வு முயற்சிகள் தோல்வியடைந்திருக்கும் நிலையில் கூட்டமைப்பு இவ்வாறானதொரு முயற்சியில் ஈடுபட்டது. பெரும்பான்மையான தமிழ்த் தேசியக் கட்சிகள் சிவில் சமூகத்தினர் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரிவருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் பொருளாதார நெருக்கடியால் ஜனாதிபதியாகும் வாய்ப்பைப் பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தப் போவதாகக் கூறிவருகின்றார். உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாட்டு தரப்பினருக்கும் அவ்வாறான வாக்குறுதிகளை வழங்கிவருகின்றார். ஆனால், மறுபுறம் தென்னிலங்கை சிங்கள - பௌத்த அடிப்படைவாத சக்திகள் 13ஆவது திருத்தத்துக்கு எதிராகப் போர்க் கொடியுயர்த்தி வருகின்றனர் - மகா சங்கத்தினரை தூண்டிவருகின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் மகாசங்கத்தினரை ரணில் சந்தித்திருக்கின்றார்.

இதுவரை நடந்த கதை ஒன்றுதான். அதாவது, அரசியல் தீர்வு முயற்சிகள் இடம்பெறுகின்றபோது, தென்னிலங்கை சிங்கள - பௌத்த அடிப்படைவாத சக்திகள் அதனை எதிர்ப்பதும், அதனடிப்படையில் முயற்சிகளை ஆட்சியாளர்கள் கைவிடுவதும் வழமையானது. இந்த பின்புலத்தில் இறுதியில் ரணிலின் 13 தொடர்பான வாக்குறுதியும் அதேபோன்றுதான் முடிவுறுமா?

# தேர்தல் செலவுக்கு கட்டுப்பணம்: தேர்தல் குழுவிடம் விளக்கம் கேட்பு

*கொழும்பு, பெப். 03*

*உள்ளூராட்சி மன்ற தேர்தல் செலவுகளுக்கு, வேட்பாளர்களால் செலுத்தப்பட்ட கட்டுப்பணம் பயன்படுத்தப்படுகிறது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இது அரசமைப்புக்கு முரணான செயல்பாடாகும். எனவே, இது தொடர்பில் விளக்கமளிக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவாவிடம் இலங்கை தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.*

*இது தொடர்பில் இலங்கை தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :*

*நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான நிதியை திரட்டுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.*

*இதன் காரணமாக தேர்தல் ஆணைக் குழுவினால் அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களால் செலுத்தப்பட்ட கட்டுப்பணத்தை செலவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*கட்டுப்பணம் செலுத்தப்படுவதற்கான காரணம் தேர்தலில் அநாவசியமான நபர்களின் பிரவேசம் காணப்படக் கூடாது என்பதற்காகவேயாகும்.*

*இது நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவும், தேவையற்ற செலவுகளைத் தவிர்க்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.*

*கட்டுப்பணம் இதுவரையில் எந்த சந்தர்ப்பத்திலும் தேர்தல் செலவுகளுக்காக பயன்படுத்தப்படவில்லை. தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் அரசுடைமையாக்கப்பட்ட கட்டுப்பணம் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படும். எஞ்சிய பணம் அந்தந்த அரசியல் கட்சிகளுக்கும் , சுயாதீன குழுக்களுக்கும் திருப்பி செலுத்தப்படும்.*

*எனவே இம்முறை செலுத்தப்பட்டுள்ள கட்டுப்பணத்தை தேர்தல் செலவுகளுக்காக பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம். ஆணைக்குழுவின் தரவிற்கமைய சுமார் 80 ஆயிரம் 000 வேட்பாளர்கள் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றனர். அவர்களால் செலுத்தப்பட்ட கட்டுப்பணம் தேர்தல் செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டால் அது தவறான முன்னுதாரணமாக அமையும்.*

*அது தேர்தலை சுதந்திரமாகவும் , நியாயமானதாகவும் நடத்துவதில் சட்ட சிக்கலை ஏற்படுத்தும். அரசியலமைப்பின் 21ஆவது உறுப்புரையின் 30(4) க்கு அமைய இந்த ஆணைக்குழு தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஒன்றாகும்.*

*அதன் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் குறிப்பிட்ட காலம் நிறைவடைந்ததன் பின்னர் பதவி விலக வேண்டும். இவ்வாறான நிலையில் முறையற்ற வகையில் அரசாங்கப் பணம் செலவிடப்படுவதால் எதிர்காலத்தில் நியமிக்கப்படும் உறுப்பினர்களும் கடும் சிரமங்களை எதிர்நோக்க நேரிடும். அத்தோடு ஊழல் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படவும் வாய்ப்புள்ளது.*

*எனவே வேட்பாளர்கள் செலுத்திய கட்டுப்பணம் தேர்தல் செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டதா இல்லையா என்பது தொடர்பில் விளக்கமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ஐ)*

# விசேட கலந்துரையாடல்!

*யாழ்ப்பாணம், பெப். 03*

*சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டும் பொருளாதார - இன நெருக்கடிகளும் என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.*

*இந்தக் கலந்துரையாடலில் தொடக்க உரையை எழுத்தாளரும், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான மு. இராசநாயகம், கருத்துரையை புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி. கா. செந்திவேல் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.*

*தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடல் நடைபெறும். ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)*

# கலைத்தூது கல்லூரியின் 12ஆவது பரிசளிப்பு விழா!

*யாழ்ப்பாணம், பெப். 03*

*திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 12 ஆவது பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.286,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.*

*கல்லூரியின் அதிபர் திருமதி மேரி அஞ்செலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், சிறப்பு விருந்தினராக "அகவொளி" குடும்ப வளத்துணை நிலையத்தின் இயக்குநர் அருட்பணி ம. டேவிட் அடிகளாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.*

*இந்நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஐ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



| | |
|---|---|
| பெப்ரவரி - 03 | வெள்ளிக்கிழமை |
| சுபகிருது வருடம் - | தை 20 |
| நல்ல நேரம் : | 09.00 - 10.30 |
| ராகு காலம் : | 10.30 - 12.00 |
| திதி : | திரயோதசி |




**மேடம்**
முயற்சியில் வெற்றி அடைவீர்கள். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். ஆதாயமான நாள். துணிச்சலுடன் செயல்படுவீர்கள். பண வரவால் கடன்களை அடைத்து நிம்மதி காண்பீர்கள்.

**இடபம்**
கவனமுடன் செயல்பட நன்மை ஏற்படும். புதிய முதலீடுகள் இன்று வேண்டாம். உங்கள் முயற்சியில் ஒன்று நிறைவேறும். வரவு செலவில் கவனம் தேவை. விரும்பியதை அடைவீர்கள்.

**மிதுனம்**
நெருக்கடிகளை சமாளித்து நினைத்ததை அடைவீர்கள். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் ஏற்பட்ட அழுத்தம் குறையும். விரும்பியதை அடைவீர்கள். வரவுகள் உண்டாகும்.

**கடகம்**
எதிர்பாராத செலவுகள் உண்டாகும். பயணத்திலும், வரவு செலவிலும் கவனம் தேவை. அரசு வழியில் நன்மைகள் ஏற்படும். செலவுகள் அதிகரிக்கும் என்றாலும் முயற்சி லாபமாகும்.

**சிம்மம்**
முயற்சிகளில் வெற்றி உண்டாகும். நண்பர்கள் வழியே நன்மை அதிகரிக்கும். நீண்ட நாட்களாக வராமல் இருந்த பணம் வந்து சேரும். தொழிலில் இருந்த சங்கடம் விலகும்.

**கன்னி**
உத்தியோகத்தில் இருப்பவர்கள் உயர் அதிகாரிகளின் பாராட்டிற்கு ஆளாவீர்கள். வியாபாரத்தில் இருந்த தடைகளை சரி செய்து நினைத்ததை சாதிப்பீர் கள். பொருள் சேர்க்கை உண்டாகும்.

**துலாம்**
நேற்றுவரை இருந்த நெருக்கடி விலகும். அரசு வழியில் உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். புதிய முயற்சி லாபமாகும். வியாபாரத்தில் ஏற்பட்ட தடைகள் நீங்கும். லாபமான நாள்.

**விருட்சிகம்**
அலைச்சல் அதிகரிக்கும். பயணத்தில் கவனமும் எச்சரிக்கையும் தேவை. தேவையற்றப் பிரச்னைகள் தோன்றும். வழக்கு விவகாரங்களில் நன்மை உண்டாகாமல் போகும்.

**தனுசு**
தம்பதிகளுக்குள் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். சுறு சுறுப்புடன் செயல்படுவீர்கள். நண்பர்கள் உதவியுடன் நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மகரம்**
முயற்சியில் இருந்த தடைகள் விலகும். விரோதிகள் விலகிச் செல்வார்கள். உங்கள் செயலில் விவேகம் இருக்கும். நிறைவேறாத எண்ணம் ஒன்று நிறைவேறும்.

**கும்பம்**
குழந்தைகளுக்காக ஒரு செயலை மேற்கொள்வீர்கள் என்றாலும், முயற்சிகளில் தடைகள் தோன்றும். ஆதாயம் எதிர்பார்த்து நீங்கள் மேற்கொண்ட ஒரு முயற்சி நிறைவேறாமல் போகும்

**மீனம்**
அலைச்சல் அதிகரிக்கும். வேலை காரணமாக வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். எதிர்பாராத நெருக்கடி ஏற்படும். கவனமாக செயல்பட நன்மை உண்டாகும். முயற்சியில் தடைகளை சந்திப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

# இலங்கையில் 13ஆம் திருத்தம் நடைமுறைக்கு வரவேண்டும்!

## தமிழக பா. ஜ. க. தலைவர் வலியுறுத்து

சென்னை, பெப். 03

இலங்கையில் 13ஆம் திருத்தச் சட்டத்தை விரைவாக அமுல்படுத்த வேண்டும் என்பது தமிழக பா. ஜ. கவின் நீண்ட கால கோரிக்கை ஆகும் என்று க. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

நேற்று புதுடில்லி புறப்பட முன்னர் சென்னை விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தற்போது இலங்கையின் சூழல் மாறி கொண்டு இருக்கிறது. வடக்கு, கிழக்கு பகுதியில் உள்ள தலைவர்கள், தமிழர்கள் 13ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ், வருவாய் ஆகிய அதிகாரங்களை தர வேண்டும் என கேட்டு கொண்டுள்ளனர் - என்றார்.

இதேசமயம், டில்லி செல்லும் அண்ணாமலை வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கரை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். இதன்போது, இலங்கையில் தமிழர்களுக்கு அதிகார பகிர்வு வழங்குதல், தமிழக மீனவர்கள் பிரச்னை குறித்து பேசப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கடலில் கருணாநிதிக்கு சின்னம் பாட்டாளி மக்கள் கட்சியும் எதிர்ப்பு!

திருவண்ணாமலை,பெப். 03

“பலரும் சின்னங்கள் வைத்து கடலை நாசப்படுத்தி விடுவார்கள் என்பதால் கடலில் பேனா வைப்பது முன்னுதாரணமாக இருக்கக் கூடாது” என பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பா. ம. க. கட்சியின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர் பில் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மறைந்த தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி மீது எங்களுக்கு மிகுந்த மரியாதை உள்ளது. அண்ணா சதுக்கம் அருகே அடக்கம் செய்ய வேண்டும் என மு. க. ஸ்டாலின் விருப்பப்பட்டார். அதனால்தான், மெரினா கடற்கரையில் எதையும் செயல்படுத்தக் கூடாது என்று பா. ம. க. தொடர்ந்த வழக்கை திரும்ப பெற்றோம். அதன் பிறகுதான், மெரினா கடற்கரையில் அடக்கம் செய்ய உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

கடல் என்பதில் சுற்றுச்சூழல் தொடர்பான பல பிரச்னைகள் உள்ளன. எனவே, கருணாநிதி நினைவிடத்தில் பேனாவை வைக்கலாம் என்பது எங்கள் கோரிக்கையாகும். கடலில் பேனா வைத்தால் சுற்றுச்சூழல் பாதிக்கும். மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துவிடும். பல சின்னங்கள் வைக்கப்பட்டு கடல் நாசப்படுத்தப்படும். கடலில் பேனா வைப்பது என்பது முன் உதாரணமாக இருக்கக் கூடாது” - என்றார். (ஐ)

# மத்திய அரசின் வரவு - செலவு; தமிழகத்துக்கு ரூ. 33,311 கோடி

சென்னை, பெப். 03

மத்திய மந்திரி நிர்மலா சீதாராமன் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்த வரவு - செலவு திட்டத்தில் பல்வேறு அறிவிப்புகள் வரிச்சலுகைகள் அறிவிக்கப்பட்டு இருந்தாலும் தமிழகம் சார்ந்த திட்டங்களுக்கு உரிய நிதி ஒதுக்கப்படவில்லை என்ற கருத்து பரவலாக முன் வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நிதித்துறை மூத்த அதிகாரி கூறியதாவது:-

மத்திய வரவு - செலவு திட்டத்தில் ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு பல்வேறு துறை வாரியான திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. ஆனால், தமிழ்நாட்டுக்கு எந்தவித திட்ட அறிவிப்பும் குறிப்பிட்டு அதற்கு நிதி எதுவும் ஒதுக்காதது ஏமாற்றம்தான்.

ஜி.எஸ்.டி. இழப்பீடு வழங்குவதை குறைந்தது மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது. அது ஏற்கப்படவில்லை. அதுமட்டுமல்ல மாநிலங்களுக்கு கடன் வழங்குவதற்கு பல்வேறு நிபந்தனைகளும் வரையரைக்கப்பட்டு உள்ளன. 2022-23ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட மத்திய வரவு - செலவு திட்டத்தில் மத்திய வரிகளின் பங்காக தமிழகம் பெற வேண்டிய தொகை ரூ.38 ஆயிரத்து 731.24 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன்மூலம் வருவாய் உயரும். இது 2022-23ஆம் ஆண்டுக்கான மாநிலத்தின் பட்ஜெட் ரூ.33 ஆயிரத்து 311 கோடியை விட அதிகமாகும். 2023-24ஆம் ஆண்டிற்கான மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3.5 சதவீதம் நிதிப் பற்றாக்குறை மாநிலங்களுக்கு அனுமதிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

இதில் 0.5 சதவீதம் மின்துறை சீர்திருத்தங்களுடன் இணைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. 2023-24ஆம் ஆண்டுக்கான மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்கு ரூ.41 ஆயிரத்து 664.86 கோடியாக இருக்கும் என்று அதில் மதிப்பிடப்பட்டுள்ளது.

# மத்திய அரசின் பட்ஜெட்; தமிழ்நாட்டுக்கு ஏமாற்றம்!

## முதல்வர் ஸ்டாலின்

சென்னை, பெப். 03

தமிழ்நாட்டுக்கு புதிய திட்டங்கள் எதையும் அளிக்காத மத்திய நிதிநிலை அறிக்கை தமிழ்நாட்டு மக்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றம் அளிப்பதாக முதல்வர் மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், 2023-24-ஆம் நிதியாண்டுக்கான ஒன்றிய அரசின் வரவு செலவுத் திட்டம் தமிழ்நாட்டுக்கு எந்த விதத் திட்ட அறிவிப்பும் இன்றி, தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றத்தில் ஆழ்த்தியுள்ளது.

தனிநபர் வருமான வரியில் கொண்டு வந்துள்ள மாற்றம்”, “இருக்கின்ற 157 மருத்துவ கல்லூரிகளில் 157 புதிய தாதியர் கல்லூரிகள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு”, “மாநிலங்களுக்கு மூலதனச் செலவினங்களுக்காக வட்டியில் லாக் கடன்”, “கட்டமைப்பு வசதிகளை மேம்ப டுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பது” போன்றவை வரவேற்கத் தக்க அம்சங்களாக இருப்பது ஆறுதல்.



நகர்ப்புர கட்டமைப்பு மேம்பாட்டுக்கென புதிய நிதியை உருவாக்கியிருந்தாலும், இதற்கான 10,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு என்பது மிகவும் குறைவாக உள்ளது

வரவு - செலவுத் திட்டத்தில் பல்வேறு புதிய திட்டங்களை அறிவிப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும் அதே வேளையில், இத்திட்டங்களுக்காக தனி நிதி ஒதுக்கீடு செய்யாதது வருந்தத்தக்கது.

கொரோனா பெருந்தொற்றிலிருந்து நம் நாடு மீண்டு வரும் இச்சூழலில், ஒன்றிய அரசின் பட்ஜெட் மீது பெரும் எதிர்பார்ப்பு மக்களிடையே இருந்தது. அந்த எதிர்பார்ப்பு பொய்த்துப் போயிருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கடன் பொறியிலிருந்து விடுபடுவதற்காக உலகின் பொருளாதார சக்திகளிடம் சரணடைய முடியாது!

## ஜனாதிபதி ரணில் கண்டியில் திட்டவட்டம்

கொழும்பு, பெப். 03

**பொருளாதார யுத்தத்தை எதிர்கொண்டுள்ள நாம் கடன் பொறியிலிருந்து விடுபடவேண்டும். அதற்காக உலகின் பொருளாதார சக்திகளிடம் சரணடைய முடியாது. நாட்டின் பொருளாதார சுதந்திரம் இல்லாமல் போனால் அரசியல் சுதந்திரத்தால் எந்தப் பயனும் இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளை எதிர்வரும் ஓரிரு மாதங்களுக்குள் நிறைவு செய்ய முடியும். இந்தியா மற்றும் சீனாவுடனான பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தில் உள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற முப்படைகளின் 77 சிரேஷ்ட அதிகாரிகளுக்கு சிறந்த சேவைக்கான விபூஷண விருதுகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போரினால் இழந்த உயிர்களை மீட்டெடுக்க முடியாவிட்டாலும், பொருளாதாரப் போரில் இழந்த வருமானத்தை மீள வழங்க முடியும். ஒரு நாட்டின் அரசியல் மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டின் ஸ்திரத்தன்மையே பொருளாதாரப் போரில் வெற்றி பெறுவதற்கான சிறந்த காரணியாகும்.

நாட்டின் பாதுகாப்புக்காக நமது பாதுகாப்புப் படையினர் உயிரைக் கொடுத்துப் போராடினார்கள். நமது இராணுவம் உலகப் போரின்போதே ஆரம்பிக்கப்பட்டது. அது உலகில் ஜனநாயகத்தைப் பாதுகாத்தது. இரண்டாவது யுத்தம் இந்த நாட்டின் ஒருமைப்பாட்டையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்காகவே நடைபெற்றது. அதற்காக நமது இராணுவம் உயிர் தியாகத்துடன் செயற்பட்டது.

இன்று நாம் ஒரு பாரிய பொருளாதார யுத்தத்தை எதிர்கொண்டுள்ளோம்.

இன்று நாட்டின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளது. அந்தப் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பாவிட்டால் இந்த கடன் பொறியில் இருந்து விடுபடாவிட்டால், எமது நாட்டின் பொருளாதார சுதந்திரம் இல்லாமல் போய்விடும். நாட்டின் பொருளாதார சுதந்திரம் இல்லாமல் போனால் அரசியல் சுதந்திரத்தால் எந்தப் பயனும் இல்லை.

இன்று உலகின் பொருளாதார சக்திகளிடம் நாம் சரணடைய முடியாது. எனவே பொருளாதாரத்தை கட்டியெழுப்பி மக்களை வாழ வைப்பதே நமது முதல் பணியாக இருக்கவேண்டும்.

அதேபோன்று மக்கள் இழந்த வருமான வழிகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். இன்று பலரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அதைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். சில அரச ஊழியர்கள் கடன் வாங்கி வரியும் செலுத்தும் நிலையில் வருமானம் இல்லாத நிலையை சந்தித்து வருகின்றனர். இந்த அழுத்தத்தை நாம் அனைவரும் தாங்கவேண்டியுள்ளது. இந்த அழுத்தத்தை நம்மால் நீக்க முடியும்.

அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க செயலாளர் விக்டோரியா நூலண்ட் என்னைச் சந்தித்தபோது, நாம் முன்னெடுக்கும் இந்த பொருளாதார திட்டத்துக்கு அமெரிக்க அரசு முழு ஆதரவை வழங்கும் என்ற அமெரிக்க ஜனாதிபதியின் செய்தியை என்னுடன் பகிர்ந்து கொண்டார். இவ்வாறு பல நாடுகளின் ஆதரவை பெற்றுள்ளோம்.

அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களில், இந்தக் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளை எங்களால் நிறைவு செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன். மேலும், இந்தியா மற்றும் சீனாவுடனான பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தில் உள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் மறுசீரமைப்பு தொடர்பான உடன்பாட்டை நாம் பெற்றபோது அதை உலகமே ஏற்றுக்கொண்டது.

இந்த வருட இறுதிக்குள் இதைவிட சிறந்த பொருளாதார நிலை உருவாகும் என்று நான் நம்புகிறேன். அதனோடு அனைத்து அரச ஊழியர்களுக்கும் ஓரளவு நிவாரணம் வழங்க வாய்ப்புக் கிடைக்கும். இந்தத் திட்டத்தை நாம் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். அதிலிருந்து நாம் வெளியேற முடியாது.

பயங்கரவாதப் போருக்கும் பொருளாதாரப் போருக்கும் இடையில் ஒரே ஒரு வித்தியாசம்தான் இருக்கிறது. அன்று உயிர்கள் பறிபோயின. இன்று வருமானம் இழக்கப்பட்டுள்ளது. இழந்த உயிர்களை மீண்டும் வழங்க முடியாது. ஆனால் இழந்த வருமானத்தை மீட்டெடுக்க முடியும் - என்றார். (அ)

# யாழில் ஹெரோயினுடன் சிக்கிய தமிழ் பொலிஸார்!

யாழ்ப்பாணம், பெப். 03

யாழ்ப்பாணத்தில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

அரியாலை பகுதியில் நேற்று முன்தினம் இரவு அவர் கைதானார்.

அரியாலை, பூம்புகாரை வசிப்பிடமாக கொண்ட தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே, நேற்று முன்தினம் இரவு மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவர் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் கடமையாற்றுகிறார்.

கைதானவரிடமிருந்து 130 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது. (அ)

# மேற்பார்வையாளருக்கு எதிராக மாணவி பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு, பெப். 03

மாத்தளையில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றில், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவி ஒருவர், பரீட்சை மேற்பார்வையாளர் ஒருவருக்கு எதிராக மாத்தளை பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வினாத்தாளுக்கு விடை எழுதும்போது, அங்கு பரீட்சை மேற்பார்வை கடமையிலிருந்த இருந்த ஆசிரியர் ஒருவரிடம் மேலதிகமாக விடைத்தாள் கேட்டபோது, அவர் அதற்கு அளித்த பதிலால் தான் அதிர்ச்சியடைந்ததாக மாணவி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி 27ஆம் திகதி மாணவி இந்த பிரச்னையை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தர்க்கவியல் வினாத்தாளுக்கு விடைகளை எழுதும் போது, பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் விடையெழுத தான் மேலதிக தாள்களை கோரியதாகவும், அதன்போது, அங்கு மேற்பார்வை கடமையிலிருந்து ஆசிரியர் ஒருவர், "இவள் இவ்வளவு விடைத்தாள்களை கேட்பது, என்ன எழுதுவதற்கு என்று தெரியவில்லை" என்று கூறியதாக மாணவி தெரிவித்துள்ளார்.

அவர் செயற்பட்ட விதத்தின் காரணமாக தான் பாடத்தையும் மறந்துவிட்டதாக இந்த மாணவி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

மேற்பார்வையாளராக செயற்பட்ட ஆசிரியரை பற்றிய எந்தத் தகவலும் தனக்கு தெரியாது எனவும் மாணவி குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மாத்தளை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சிறையில் கணவனுக்கு ஹெரோயின் கொண்டு சென்ற மனைவி சிக்கினார்

கொழும்பு, பெப். 03

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபருக்கு அவரது மனைவி, காற்சட்டையில் மறைத்து கொண்டு சென்ற சுமார் 5 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை நேற்று முன் தினம் கைப்பற்றியதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் சோதனையிட்ட போதே காற்சட்டையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 கிராம் 48 மில்லிகிராம் ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த பெண்ணையும் போதைப் பொருளையும் களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் கூறினர். (அ)

# ஓட்டோ கட்டணம் மாற்றம் இல்லை

கொழும்பு, பெப். 03

பெற்றோல் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் ஓட்டோ கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வதில்லை என்ற தீர்மானத்தை எடுத்துள்ளதாக அகில இலங்கை ஓட்டோச் சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு அந்த சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

சமீபத்தில் மூன்று முறை பெற்றோல் விலை குறைக்கப்பட்டது. எனினும் ஓட்டோ கட்டணம் குறைக்கப்படவில்லை.

எனவே, நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் ஒக்ரேன் 92 பெற்றோல் லீற்றரொன்றின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டபோதிலும், கட்டணத்தில் எந்த திருத்தமும் செய்வதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தினர் தெரிவித்தனர்.

எனவே, அரசாங்கம் எரிபொருள் விலையை அதிகரிப்பதைப் போன்று எரிபொருள் ஒதுக்கீட்டையும் அதிகரிக்குமாறும், எரிபொருள் அனுமதிப்பத்திர முறையில் அதனையும் உள்ளடக்குமாறும் ஓட்டோச் சாரதிகள் சங்கம், அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று!

கொழும்பு, பெப். 03

விசேட கட்சித் தலைவர் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

பாராளுமன்ற வளாகத்தில் பிற்பகல் 2 மணிக்கு கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 08ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாராளுமன்றத்தின் புதிய அமர்வு தொடர்பில் இங்கு கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

9ஆவது பாராளுமன்றத்தின் மூன்றாவது அமர்வு கடந்த 27ஆம் திகதி நள்ளிரவு நிறைவடைந்தது.

புதிய அமர்வு எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் என விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மூன்று பஸ்கள் மோதி விபத்து; 9 அதிரடிப் படையினர் காயம்

கொழும்பு, பெப். 03

75ஆவது சுதந்திரதின கடமைகளுக்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையின் சிப்பாய்களை ஏற்றிச் சென்ற 3 பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 9 பேர் காயமடைந்து பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுகுருந்த பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமில் இருந்து கொழும்புக்கு பயணித்துக் கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)




# தெற்கின் ஜனநாயகப் போராளிகள் தமிழருக்கு ஆதரவளிக்கவேண்டும்!

## தமிழ் தேசியக் கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 03
தென்னிலங்கை ஜனநாயகப் போராளிகள் தமிழ் மக்களின் அரசியல் நீதி கோரிக்கையை அங்கீகரிக்கவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந. சிறிகாந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாரிய பொருளாதார நெருக்கடி நிலையின் மத்தியிலும் இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை கோலாகலமாக கொண்டாடுவதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் முடிவெடுத்து நிற்கின்ற சூழ்நிலையில் சுதந்திர தினக் கொண்டாட்டத்தை புறக்கணிக்கப்போவதாகவும் மனித உரிமை மீறல்கள் இந்த அரசாங்கத்தில் தொடர்ந்து கொண்டிருக்கும் காரணத்தினால் நாளை (இன்று) மாலையில் இருந்து போராட்டம் நடத்தப் போவதாகவும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி மத்தியில் இவ்வாறான ஒரு கொண்டாட்டம் தேவைதானா? அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் இதில் கலந்து கொள்ள முடியுமா? என்ற கேள்விகளை எல்லாம் எழுப்பி கத்தோலிக்க திருச்சபை இதனை புறக்கணிக்கப்போவதாக அறிவித்திருக்கின்றது. பல்வேறு சிவில் அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் ஒன்றியம் என்பன எதிர்வரும் 75ஆவது சுதந்திர தினத்தை கரி நாளாக பிரகடனப்படுத்தி யிருக்கின்றார்கள்.

பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து மட்டக்களப்பில் முடிவடையும் விதத்தில் ஒரு பாரிய பேரணிக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றது.

இந்த அழைப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வெளியிட்டிருக்கும் சூழ்நிலையில் சில கருத்துக்களை பொதுவெளியில் முன் வைப்பது பொருத்தமானது-அவசியமானது என்று கருதுகின்றோம்.

தமிழ் மக்கள் சுதந்திர தினத்தை கரி நாளாக அனுஷ்டிப்பது இது முதல்தடவையல்ல.

தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் நீதி தொடர்பில் ஒரு திட்டவட்டமான நிலைப்பாட்டுக்கு தென்னிலங்கையில் ஜனநாயகத்தின் பெயரில் குரல் எழுப்புகின்ற போராடுகின்ற அனைத்து முற்போக்கு சக்திகளும் வரவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்

13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு இரண்டு வாரங்கள் போதும். ஆனால் இலங்கை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக பகிரங்கமாக அறிவித்துள்ள சூழ்நிலையில் அது தொடர்பில் அரசாங்க தரப்பில் இருந்து பல்வேறு எதிர்ப்பு குரல்கள் இப்போது எழுந்து கொண்டிருக்கின்றன.

பதவியை விட்டு விரட்டி அடிக்கப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தீவிர ஆதரவாளர்களாக கடைசிவரை இருந்தவர்கள் இப்பொழுதும் உள்ளனர். அரசாங்க தரப்பில் அமர்ந்துள்ளவர்கள் பலர் 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறை முற்படுத்தப்படுத்துவதற்கு எதிராக போர்க்கொடி தூக்குகின்றார்கள்.

தென்னிலங்கையில் ஜனநாயக எழுச்சியை மீளக் கொண்டுவர தயாராக உள்ள இளைஞர் யுவதிகளுக்கும் அரசியல் நடவடிக்கையாளர்களுக்கும் தொழிற்சங்கவாதிகளுக்கும் ஒரு செய்தியை தாழ்மையாகவும் உறுதியாகவும் சொல்ல விரும்புகின்றோம்.

தமிழ் மக்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற முறையில் இந்த நாட்டின் ஆட்சியமைப்பு முறையை மாற்றி அமைப்பதற்கு சிங்கள முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்து ஆதரவளிக்கவேண்டும்.

ஜனநாயகப் போராளிகளாக தென் பகுதியில் மக்கள் மத்தியில் உள்ளவர்கள் தமிழ் மக்களின் அரசியல் நீதி கோரிக்கையை அங்கீகரிக்க வேண்டும்.

எனவே தமிழ் மக்களின் கோரிக்கையை அவர்கள் ஏற்காதவரையில் அவர்களின் ஜனநாயக ரீதியான எந்த ஒரு போராட்டத்திற்கும் தமிழ் மக்களின் ஆதரவு கிடைக்காது-என்றார். (அ)

---

## வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மூலம் 2022இல் 3,789 மில். டொலர் வருமானம்!

கொழும்பு, பெப். 03
நாட்டிலிருந்து 2022ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சென்றுள்ளவர்கள் மூலம் 3,789 மில்லியன் அமெரிக்க டொலர் நாட்டுக்கு கிடைத்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதேவேளை, 2021ஆம் ஆண்டு இவ்வாறு நாட்டிலிருந்து வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சென்றுள்ளவர்கள் மூலம் 5,491 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைத்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள மத்திய வங்கியின் அதிகாரிகள், 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அந்த வருமானம் 2022ஆம் ஆண்டு 31.0 வீதமாக குறைவடைந்துள்ளதாகவும், எவ்வாறெனினும் கடந்த வருடத்தின் நடுப்பகுதியில் அதனை இயல்பு நிலைக்கு கொண்டுவர முடிந்துள்ளதாகவும் கூறினர். (அ)

## பஸ், ரயில் பயண சீட்டுகளுக்கு பதிலாக போக்குவரத்து அட்டை

கொழும்பு, பெப். 03
பயணிகள் பஸ்கள் மற்றும் ரயில்களில் பயணச் சீட்டுக்குப் பதிலாக புதிய போக்குவரத்து அட்டையை அறிமுகப்படுத்துவதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்தானது.

போக்குவரத்து அமைச்சு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையை உள்ளடக்கி இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

மாகும்புர-காலி அதிவேக நெடுஞ்சாலையில் பஸ்களுக்கான இந்தப் புதிய சேவை உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும்,

விரைவில் நாடு முழுவதும் அமுல்கூடிய விரைவில் இந்த முறை நாடு முழவதும் விரிவுபடுத்தப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மார்ச் மாத இறுதிக்குள் கையடக்க தொலைபேசியூடான செலுத்துகைகளும் செயற்படுத்தப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சுகாதார உதவியாளர் ஹெரோயினுடன் கைது

கொழும்பு, பெப். 03
250,000 ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சுகாதார உதவியாளராக கடமையாற்றும் பெண் ஒருவரை கட்டுநாயக்க பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் குழு கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலனறுவை, கலிங்க கால்வாய் பகுதியில் வசிக்கும் 38 வயதுடைய குறித்தப் பெண் தற்போது கட்டுநாயக்க, கோவின்ன பிரதேசத்தில் வீடொன்றை வாடகைக்கு எடுத்து கணவருடன் வசித்து வருகிறார் என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

ஹெரோயின் தனித்தனியாக சிறிய பொதிகளில் அடைக்கப்பட்டு அழகு சாதனப் பொருட்களுடன் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## கல்வியங்காடு வர்த்தகருக்கு வாள்வெட்டு; பிரதான சந்தேகநபர் உட்பட 4 பேர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 03
கல்வியங்காடு பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றினுள் வாள்களுடன் புகுந்து அடாவடியில் ஈடுபட்டு விட்டு 5 லட்சம் ரூபாய் பணத்தைச் கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய முதன்மைச் சந்தேக நபர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை ஒன்றின் அபிவிருத்திச் சங்க முரண்பாடு ஒன்று காரணமாக டென்மார்க்கில் உள்ள ஒருவர் பணம் அனுப்பி இந்த வன்முறையை வழிநடத்தியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரே இந்தக் கைது மற்றும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் ஜனவரி மாத நடுப்பகுதியில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கோப்பாய் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் லக்சாந் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நேற்று முன் தினம் மூவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜீவன்பாய் சஜீவன் (வயது-29), கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த கிருஸ்ணா (வயது-25) மற்றும் கோப்பாயைச் சேர்ந்த சுதர்சன் (வயது-26) ஆகிய மூவரே கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முன்பகை காரணமாக இந்த அடாவடி மற்றும் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளில் யாழ்ப்பாணம், கலட்டிப் பகுதியில் வைத்து சிந்துஜன் (வயது-22) என்ற முதன்மைச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், டென்மார்க்கில் வசிக்கும் விஸ்வா என்பவர் பணம் அனுப்பியே வர்த்தக நிலையத்துக்குள் புகுந்து வன்முறையில் ஈடுபட்டதாகத் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறினர்.

பாடசாலை ஒன்றின் அபிவிருத்திச் சங்கத்துடன் ஏற்பட்டுள்ள முரண்பாடு காரணமாக கூலிக்கு ஆள் வைத்து அச்சுறுத்தும் வகையில் இந்த சம்பவம் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். சம்பவத்துடன் 7 பேர் தொடர்புடைய நிலையில் நால் வர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் மூவர் தேடப்படுவதாகவும் பொலிஸார் கூறினர். (அ)

## பேராதனை பல்கலை மாணவர் 14 பேர் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, பெப். 03
பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரும், சிரேஷ்ட பேராசிரியருமான அத்துல சேனாரத்ன மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களை தாக்கி உத்திபோக பூர்வ இல்லத்துக்கு சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 14 மாணவர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஒவ்வொரு மாணவரும் தலா 15,000 ரூபா மற்றும் 05 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில், இவர்களை விடுவிக்க மஜிஸ்திரேட் ஸ்ரீநித் விஜேசேகர உத்தரவிட்டார்.

பிணையில் விடுவிக்கப்பட்ட பேராதனை பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் சாமோத் சத்சர, மாதத்தில் முதலாம் மற்றும் மூன்றாம் வார ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட குற்றவியல் பிரிவில் ஆஜராக வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார்.

ரொக்கப் பிணையிலும், சரீரப் பிணையிலும் விடுவிக்கப்பட்ட மாணவர்களுக்கு மேலும் பல நிபந்தனைகளை விதித்த நீதிவான், மீறினால் பிணை இரத்து செய்யப்படும் என்று அறிவித்தார்.

இந்த வழக்கில் சாட்சியங்களை வழங்கிய முறைப்பாட்டின் சாட்சிகள் மற்றும் எதிர்காலத்தில் சாட்சியமளிக்கவுள்ள சாட்சியாளர்களுக்கு நேரடியா கவோ அல்லது மறைமுகமா கவோ எந்த வகையிலும் இடையூறுகளை ஏற்படுத்தக்கூடாதெ னவும் சந்தேகத்திற்குரிய மாணவர்களுக்கு நீதிவான் அறிவித்துள்ளார்.

இந்த வழக்கு மார்ச் 15ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (அ)

# இலங்கை தொடர்பில் நாணய நிதியத்துக்கு உத்தரவாதங்கள் வழங்க பாரிஸ் கிளப் தயார்!

கொழும்பு, பெப். 03

பாரிஸ் கிளப் இலங்கையின் கடன் உதவி தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திற்கு உத்தரவாதங்களை வழங்கவுள்ளது.

ரொய்ட்டர் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணயநிதியத்தின் 2.9 பில்லியன் நிதி உதவியை இலங்கை பெறுவதற்கு அவசியமான நிதி உத்தரவாதங்களை சர்வதேச நாணயநிதியத்திற்கு வழங்குவதற்கு பாரிஸ் கிளப் தயார் என இந்த விவகாரம் குறித்து நன்கறிந்த இருவர் ரொய்ட்டருக்கு தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கான ஆதரவை (கடன்மறுசீரமைப்பிற்கான) பாரிஸ் கிளப் விரைவில் வெளியிடும் என தனது பெயரை வெளியிட விரும்பாத ஒருவர் ரொய்ட்டருக்கு தெரிவித்துள்ளார்.

அதிகரிக்கும் பணவீக்கம் பொருளாதார மந்தநிலை நாணயபெறுமதி வீழ்ச்சி ஆகியவற்றின் பிடியில் சிக்குண்டுள்ள இலங்கை கடந்த செப்ரெம்பர் மாதம் சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட உடன்படிக்கையை செய்துகொண்டது.

இலங்கையின் பொதுக் கடன் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 122 வீதமாக காணப்படுகின்றது .

பாரிஸ் கிளப்பில் அங்கம் வகிக்காத சீனாவும் இந்தியாவும் இலங்கைக்கு அதிகளவு கடன்களை வழங்கியுள்ளன.

பாரிஸ் கிளப்பின் உத்தரவாதம் சீனாவில் தங்கியிருக்கவில்லை என இந்த விடயம் குறித்து நன்கறிந்த தரப்பொன்று தெரிவித்தது.

பாரிஸ் கழகம் சீனா உட்பட தனது அமைப்பில் அங்கத்துவம் வகிக்காத நாடுகளை இலங்கை தொடர்பான நிதி உத்தரவாதங்களிற்காக அணுகியுள்ளது என மற்றுமொரு தரப்பு தெரிவித்துள்ளது.

எனினும் அந்த தரப்பு இது குறித்த மேலதிக தகவல்களை வழங்கவில்லை.

சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் கீழ் இலங்கையின் கடன் சுமையை குறைப்பதற்கு உதவுவதாக இந்தியா உத்தரவாதத்தை வழங்கியுள்ளது.

இதேவேளை சீனாவின் எக்சிம் வங்கி இலங்கைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கடன்களை மீளப்பெறுவதை இரண்டு வருட காலத்திற்கு ஒத்திவைப்பதாக தெரிவித்துள்ளது.

சீனாவின் இலங்கை தொடர்பான இந்த நிலைப்பாடு குறித்து சர்வதேச நாணயநிதியம் இது வரை எந்த கருத்துக்களையும் வெளியிடவில்லை. (அ)

## இலங்கையின் மனித உரிமை குறித்து ஐ.நாவில் மன்னிப்புச் சபை அறிக்கை

### மார்ச் மாத அமர்வில் முன்வைக்க திட்டம்

கொழும்பு, பெப். 03

**இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான அறிக்கையை ஐ.நாவில் சமர்ப்பிப்பதற்கு தயாராகி வருவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.**

எதிர்வரும் 27ஆம் திகதி முதல் மார்ச் 24ஆம் திகதி வரை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழுவின் 137ஆவது அமர்வு இடம்பெறவுள்ளது.

இந்த அமர்வின்போதே குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுதாக சர்வதேச மன்னிப்புச் சபை கூறியுள்ளது.

இந்த சமர்ப்பிப்பில், அரசியலமைப்பு கட்டமைப்பு, ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான பாகுபாடு மற்றும் சமத்துவம், அவசரகால நிலைகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறல் மற்றும் பயனுள்ள உரிமைக்கான உரிமை தொடர்பான பிரச்னைகள் தொடர்பாக தனது கவலைகளை சர்வதேச மன்னிப்புசபை முன்வைக்கவுள்ளது. (அ)

## நள்ளிரவில் வீசிய சுழல் காற்றால் பல இலட்சம் ரூபா சொத்து இழப்பு

வடமராட்சி, பெப். 02

நள்ளிரவில் வீசிய சுழல் காற்றினால் மரத் தளபாட தொழிலகத்தின் கூரை தூக்கி வீசப்பட்டமையால் சுமார் 80 இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் மழையில் நனைந்து நாசமாகியுள்ளன.

குறித்த சம்பவம் புதன் இரவு வீசிய சுழல் காற்றினால் பருத் தித்துறை தும்பளை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் புதன் கிழமை பிற்பகலிலிருந்து கன மழை பெய்துவந்த நிலையில் நள்ளிரவுவேளை குறித்த சுழல் காற்று குறித்த மரத்தளபாடத் தொழிற்சாலை சூழலில் வீசியமையால் கட்டடத்தின் கூரைத் தகடுகள் சேதமடைந்தமையாலும் காற்றினால் தூக்கி வீசப்பட்டமையாலும் மழை நீரில் இயந்திரங்கள் நனைந்து பெறுமதி வாய்ந்த மரத்தளபாட உற்பத்தி இயந்திரங்கள், கணினி கள், நிழல்பட பிரதி இயந்திரங் கள், மின் இணைப்பு சாதனங் கள் உட்பட சுமார் 80 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக் கள் மழையில் நனைந்து நாசமாகியுள்ளன. (அ-02)

## கடவுளிடமே மன்னிப்புக் கோரினேன் கத்தோலிக்க தேவாலயத்திடம் அல்ல!

கொழும்பு, பெப். 03

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கத்தோலிக்க தேவாலயத்திடம் மன்னிப்பு கேட்கவில்லை. கடவுளிடமே மன்னிப்பு கோரினேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இதனை கூறினார்.



மைத்திரிபால சிறிசேன

ஜனாதிபதியாக இருந்தபோது இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்களுக்கு சமூகத்திடம் அவர் மன்னிப்பு கோரினார் என தெரிவிக்கப்பட்டதையடுத்து, அவர் கோரிய மன்னிப்பை கத்தோலிக்க திருச்சபை நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மின்சார சபைக்கு எதிராக மனு!

கொழும்பு, பெப். 03

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு , இலங்கை மின்சார சபைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளது.

தற்போது நடைபெற்று வரும் 2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகளைக் கருத்திற்கொண்டு மின் துண்டிப்புக்களை தடுக்கும் வகையில் இந்த ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

331,000 க்கும் மேற்பட்ட மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பெப்ரவரி 17 ஆம் திகதி வரை திட்டமிடப்பட்ட மின்வெட்டை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதிக்க வில்லை.

இந்த காலகட்டத்தில் இது போன்ற மின்வெட்டுகள் அங்கீகரிக்கப்படாத மற்றும் சட்ட விரோதமானதாக கருதப்படும் என்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

கடந்த வாரம் பல சந்தர்ப்பங்களில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, பெப்ரவரி 17 ஆம் திகதி வரை மின்வெட்டை அமுல்படுத்தாமலிருப்பதற்கு இலங்கை மின்சாரசபை, மின்சக்தி அமைச்சு உள்ளிட்ட தரப்பினர் இணக்கப்பாட்டை தெரிவித்திருந்தனர்.

எவ்வாறாயினும், மின்வெட்டை அமுல்படுத்தமாட்டோம் என்று ஒப்புக்கொண்டபோதிலும் அடுத்த இரண்டு நாட்களில் பல பகுதிகளில் மின் துண்டிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கும் உயர்தரப் பரீட்சைகளின்போது மின்வெட்டைத் தடுக்கத் தவறியதற்காக பிரதிவாதிகளுக்கு எதிராக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ரிட் மனுவை தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தேர்தல் ஆணைக்குழுக் கூட்டத்தில் திருமதி சார்ள்ஸ் பங்கேற்கவில்லை

கொழும்பு, பெப். 03

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பி.எம்.எஸ். சார்ள்ஸின் பதவி விலகலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஏற்றுக் கொள்ளாதபோதும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் அவர் பங்கேற்கவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாகப் பல தரப்பும் குற்றம் சுமத்தும் நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பதவியிலிருந்து பி.எம்.எஸ். சார்ள்ஸ் பதவி விலகுவதாக அறிவித்திருந்தார்.

ஆனாலும், அவரது பதவி விலகலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் உறுப்பினர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ் கலந்து கொள்ளவில்லை என தகவல்கள் கூறுகின்றன.

எனினும் ஏனைய 4 உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர் எனத் தெரியவருகிறது. (அ)

## கொம்பனித் தெருவின் ஆங்கில பெயரை உடனடியாக மாற்ற பிரதமர் பணிப்புரை

கொழும்பு, பெப். 03

"ஸ்லேவ் ஐலண்ட்" என்ற ஆங்கிலப் பெயரை உடனடியாக "கொம்பன்ன வீதிய" என மாற்றுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று தெரிவித்தார்.

75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்த பெயரை மாற்ற முடிவு செய்துள்ளதாக அவர் கூறினார்.

பெயரை மாற்றுவதற்கு உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு, பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஸ்லேவ் ஐலண்ட் (Slave Island) என்ற ஆங்கில பதம் தமிழில் "அடிமைத்தீவு" என்ற அர்த்தத்தை வழங்குகிறது.

எனவே, அந்த பெயரை மூன்று மொழிகளில் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) உச்சரிக்க வசதியாக மாற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அஞ்சல் மா அதிபர் மற்றும் மாநகர சபை ஆணையாளர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலனித்துவ காலத்தில் "ஸ்லேவ் ஐலண்ட்" என்று ஆங்கிலத்தில் அழைப்பட்டது.

பின்னர் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் "கொம்பன்ன வீதிய" மற்றும் "கொம்பனித்தெரு" என்ற பெயர்கள் பயன்படுத்தப்பட்டது.

எனினும், ஆங்கிலத்தில் ஸ்லேவ் ஐலண்ட் என்ற பெயரிலேயே கொம்பனித் தெரு அழைக்கப்பட்டு வந்துள்ளது. (அ)

# கடலுக்குள் பேனா நினைவுச் சின்னம்: சுற்றுச் சூழலை எந்த அளவுக்குப் பாதிக்கும்?

- முரளிதரன் காசிவிஸ்வநாதன்



தமிழ்நாட்டின் மறைந்த முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதிக்கு மெரீனா கடற்கரையை ஒட்டியுள்ள கடல் பகுதியில் பேனா வடிவில் நினைவுச் சின்னம் அமைக்க தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள முடிவு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இது எந்த அளவுக்கு சுற்றுச்சூழலை பாதிக்கும்?

முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி யின் நினைவைப் போற்றும் விதமாக சென்னை மெரீனா கடற்கரையில் அவரது நினைவிடத்திற்கு அருகில் கடலுக்குள் 134 அடி உயரத்தில் பேனா வடிவில் ஒரு நினைவுச் சின்னம் அமைக்க தமிழ்நாடு அரசு திட்டமிட் டிருக்கிறது.

81 கோடி செலவில் இந்த நினைவுச் சின்னம் அமைக் கப்படும் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கடலுக்குள் அமைக்கப்படும் இந்த பேனா நினை வுச் சின்னத்தை சென்றடைய கடற் கரையில் 290 மீட்டர் நீளத்திற்கும் கடலுக்குள் 360 மீட்டர் நீளத்திற்கும் பாலம் அமைக்கப் படவுள்ளது. ஒட்டுமொத்தமாக 8,551.13 சதுர மீட்டர் இடம் பயன்படுத்தப்படவிருக்கிறது.

அரசு தயாரித்துள்ள திட்ட அறிக்கையின்படி, இந்த நினைவுச் சின்னம் அமையவுள்ள பகுதி கடலோர ஒழுங் காற்று மண்டல பகுதிகளுக்குள் வருகிறது.

இந்த பேனா வடிவ நினைவுச் சின்னம் அமையும் இடம் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011ன் படி பகுதி IV(A)ன் கீழ் வருகிறது. IV (V) என வரையறுக்கப்பட்ட பகுதிகளில் இருந்து 200 மீட்டர் தூரத்திற்கு புதிதாக எந்தக் கட்டுமானத்தையும் கட்ட முடியாது.

ஆனால், 2015ஆம் ஆண்டு பிப்ரவரியில் இந்த விதி முறையில் ஒரு திருத்தம் செய்யப்பட்டது. மும்பை கடற் கரையை ஒட்டி சத்ரபதி சிவாஜி சிலையை அமைப்பதற் காக செய்யப்பட்ட அந்தத் திருத்தத்தின்படி, IV (V) என வரையறுக்கப்பட்ட பகுதிகளில் விதிவிலக்கான நேரங்களில் நினைவிடங்கள் - நினைவுச் சின்னங்கள் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டது. அந்தத் திருத்தத் தின் அடிப்படையில்தான், தற்போது பேனா நினைவுச் சின்னம் கடலுக்குள் அமைக்கப்படுகிறது.

### சுற்றுச்சூழல்கள் ஆர்வலர்கள் எதிர்ப்பு

ஆனால், இந்தத் திட்டத்தை சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் சில மீன்பிடி சங்கங்களும் எதிர்க் கின்றன. இந்தத் திட்டம் தொடர்பாக ஊரூர்குப்பம் மீன் பிடிப்போர் கூட்டுறவு சங்கம் மாநில கடற்கரை மண் டல மேலாண்மை ஆணையத்திற்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளது. அந்தக் கடிதத்தில் இத்திட்டத்தை அரசு கைவிட வேண்டும் என்றும் அதற்கான காரணங்களை யும் முன்வைத்துள்ளது.

“கடலிலும், கடற்கரையிலும் திட்டங்களை கொண் டுவரும் போது அந்தந்த மாவட்டங்களில் மீனவர்க ளுக்கு பாதிப்பு உள்ளதா, இல்லையா என்பதனை அறிந்து கொள்ள கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணை 2011 பத்தி 6(c)ல் மாவட்ட கடற்கரை மண்டல மேலாண்மை குழுமத்தில் மூன்று மீனவ பிரதி நிதிகள் இருக்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

ஆனால் 21 வருடங்கள் ஆகியும் மீனவ பிரதிநிதிகள் ஒருவர் கூட கிடையாது. மீனவ பிரதிநிதிகள் இல்லாம லேயே கடலிலும், கடற்கரையிலும் அரசால் திட்டங்க ளுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. மீனவர்களின் மீன்பிடி தகவல்களை அரசு முறையாக கடற்கரை மண் டல மேலாண்மை திட்டத்தில் பதிவு செய்யாமல் கடல் நடுவே கலைஞர் பேனா நினைவுச்சின்ன திட்டத்தை அமைத்தால் கரைத்தொழிலை நம்பியுள்ள மீனவர்கள் மற்றும் நடுக்கடலை நம்பியுள்ள மீனவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள்.

ஆகையால் இந்த திட்டத்தை கைவிட வேண்டு மெனவும், மீனவர்களின் மீன்பிடி இடங்களை சட்டத் தில் கூறியுள்ள படி பதிவு செய்ய வேண்டும்” என அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

அதேபோல, அகில இந்திய மீனவர் சங்கத்தின் தேசி யத் தலைவரான ஆண்டன் கோம்சும் இது தொடர்பாக துண்டறிக்கை மூலம் பிரச்சாரம் செய்துவருகிறார். “சமீபத்தில் தேசிய கடல் ஆராய்ச்சி நிறுவனம் வெளி யிட்ட அறிக்கையில், கடந்த 20 ஆண்டுகளில் தமிழக கடற்கரையில் 422 கி.மீ. அளவுக்கு கடல் அரிப்புக்கு உள்ளாகியிருக்கிறது.

இந்தியாவில் கடல் அரிப்பு அதிகமுள்ள நான்காவது மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. 1990 முதல் 2018 வரை 1802 ஹெக்டேர் நிலம் கடலரிப்புக்கு உள்ளாகி யுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடலரிப்பைத் தடுக்கும் கட்டுமானங்கள் நூற்றுக்கணக்கில் செய்தும் பலனில்லை.

ஆகவே நினைவுச் சின்னத்தின் நிலைப்புத் தன்மை, கடலரிப்பு, மீனவர்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றை மனதில் கொண்டு இந்தத் திட்டத்தை கைவிட வேண் டும்” என்கிறார் ஆண்டன் கோம்ஸ்.

பூவுலகின் நண்பர்கள் அமைப்பும் இந்தத் திட்டத் திற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறது. “இந்தத் திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கையில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதை காணமுடிகிறது. திட்ட அமைவிடத்தில் இருந்து 500 மீட்டர் தூரத்திற்கு மீன்பிடி நடவடிக்கைகள் நடை பெறவில்லை என சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், தென் சென் னையைச் சேர்ந்த 14 கிராமங் கள், வட சென்னையைச் சேர்ந்த 20 கிராமங்கள் என 34 கிராமங்களை சேர்ந்த மீனவர் கள் இப்பகுதியில் மீன் பிடித்து வருகின்றனர். இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட் டால் அப்பகுதி யில் பாரம்பரியமாக மீன்பிடித்து வரும் பல ஆயிரக்கணக்கான மீன வர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்.

பங்குனி ஆமைகள் (Olive Ridley Turtle) திட்ட அமை விடத்தில் தென்படு வதாக சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் 175வது பக்கத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அழிந்து வரும் உயிரின மாக ஐருஊடு அமைப்பால் அறிவிக் கப்பட்டுள்ள இந்த பங்குனி ஆமை களின் வாழிடமாகவும் முட்டையி டும் இடமாகவும் மெரினா கடற் கரை உள்ளதால். இத்திட்டம் நடை முறைப் படுத்தப்பட்டால் பங்குனி ஆமைகளின் எண்ணிக்கை வெகு வாக குறையும் அபாயம் உள்ளது.

திட்ட அமைவிடத்தில் இருந்து 130மீ தூரத்தில் கூவம் ஆறு கட லில் சேரும் முகத்துவாரப் பகுதி அமைந்துள்ளது. பொதுவாக இந்த முகத்துவாரப் பகுதியில தான் மீன்கள் அதிகம் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் என்பதனால், கடலின் உயிர் பன்மையம் செழிப் பாக வைத்திருக்க உதவும் இப்பகு தியின் ஆரோக்கியம் மிக முக்கி யத்துவம் வாய்ந்தது. கூவம் ஆறு கடலில் சேரும் முகத்துவாரத்தின் அருகில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால் அப்குதியின் உயிர் பன்மையம் கடுமையாக பாதிக்கப்படும்.

இத்திட்டத்திற்காக கடலில் ஆழ்துளைகள் போடப் பட்டு பிரமாண்ட தூண்கள் அமைக்கப்படவுள்ளன. இது மீட்டெடுக்க முடியாத நிரந்தர சூழலியல் பாதிப்பு களுக்கு வழிவகை செய்து விடும்.

ஏற்கெனவே துறைமுகம் கட்டியதன் விளைவாக ஆண்டிற்கு 20 மீட்டர் அளவிற்கான கடல் அரிப்பை வட சென்னை சந்தித்து வருகிறது. இந்நிலையில் மெரி னாவில் கடலுக்குள் பேனா நினைவுச் சின்னம் அமைக் கப்பட்டால் மெரினா கடற்கரை உட்பட அருகாமை யில் உள்ள பல மீனவ கிராமங்கள் கடல் அரிப்பினால் பாதிக்கப்படும்” என அந்த அமைப்பு கூறியிருக்கிறது.

இந்தத் திட்டத்திற்கான ஆய்வே முறைப்படி செய் யப்படவில்லை என்கிறார் சுற்றுச்சூழல் ஆர்வலர் முகிலன். “திட்ட ஆய்வை 2021 மே - ஜூலை மாதங் களில் செய்ததாகச் சொல்கிறார்கள். இந்த அரசே 2021 மே மாதம் தான் பதவியேற்றது. உடனே இந்த ஆய்வை நடத்தினார்களா?” என்று கேள்வி எழுப்புகிறார் அவர்.

“ஏற்கெனவே சென்னைத் துறைமுகத்தால், அதற்கு வடக்கே உள்ள காசிமேட்டிற்கு அப்பால் துவங்கி திரு வள்ளூர் மாவட்டம் நெட்டுக்குப்பம் வரை பல கிரா மங்கள் கடலுக்குள் சென்றுவிட்டன. கிட்டத்தட்ட ஒன் றரை - இரண்டு கி.மீ.க்கு கடல் உள்ளே வந்துவிட்டது. பல பட்டா நிலங்கள் தற்போது கடலுக்குள் இருக்கின் றன.

ஆனால், இந்தத் திட்டத்தில் பாலம் போலத்தான் அமைப்பதால் நீரோட்டம் பாதிக்கப்படாது என நம்பு கிறோம். அந்தப் பகுதியில் மீன் பிடிக்க அனுமதிப் போம் என்கிறார்கள். ஆனால், அதைச் சட்டப்படி எங்க ளுக்குச் உறுதி செய்து தர வேண்டும். கடலும் கூவம் ஆறும் கலக்கும் இடத்தில் இந்தக் கட்டுமானம் நடக்க விருக்கிறது. அது இறால் மீன்கள் அதிகமுள்ள பகுதி. ஆகவே கட்டுமான பணிகள் நடக்கும் நேரத்தில் மீனவர் களுக்கான வாழ்வாதாரத்தை அரசு உறுதிசெய்ய வேண் டும்” என தெரிவித்தார் அகில இந்திய பாரம்பரிய மீன வர் சங்கத்தைச் சேர்ந்த மகேஷ்.

பொதுவாக, இதுபோன்ற திட்டங்களுக்கான கருத் துக் கேட்புக் கூட்டங்களில் மூன்றில் இரண்டு பங்கினர் அந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தால் அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது. மேலும் பதிவுசெய்யப்படும் ஒவ்வொரு எதிர்ப்பிற்குமான பதிலை, திட்டத்தை செயல்படுத்துவோர் தர வேண்டும்.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று நடந்த கருத்துக் கேட்புக் கூட்டத்தில் சீமான் மட்டுமல்லாமல் குறிப்பி டத்தக்க அளவில் எதிர்ப்புக் கருத்துகள், ஆட்சேபணை கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசு மிக முனைப்பாக இருக்கிறது.



# இலங்கையின் அரசியல் யாப்பில் சமூகங்கள்!

# இலங்கையின் இரண்டு அரசியலமைப்புக்களும் பௌத்த மதத்திற்கே முன்னுரிமை வழங்கின!

நிஹால் அபேசிங்க

(நேற்றைய தொடர்ச்சி)

ஐக்கிய முன்னணியின் 1970 கூட்டு தேர்தல் விஞ்ஞாபனம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு புதிய அரசியல் யாப்பை வரைபு செய்து, ஏற்று, செயற்படுத்துவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென வாக்காளர்களிடம் கேட்டுக் கொண்டிருந்தது. அந்த அரசியல் யாப்பு இலங்கையை சுதந்திரமான ஒரு இறைமை அரசாகவும், சுதந்திரமான குடியரசாகவும் பிரகடனம் செய்யும் எனவும் கூறப்பட்டது. 1970ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14ஆம் திகதி இடம்பெற்ற மகா தேசாதிபதியின் உரையிலும் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டது. அதனையடுத்து, 1970 ஜூன் 24ஆம் திகதி அரசியல் யாப்பு சபையொன்றை உருவாக்குவதற்கான முன்மொழிவு நாடாளுமன்றத்தில் எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டது. இந்த வரைவு முடிவாக்கப்பட்டு, 1972 மே மாதம் 22ஆம் திகதி பிரகடனம் செய்யப்பட்டது.

பௌத்த மதம் தொடர்பாக அந்த அரசியல் யாப்பின் அத்தியாயம் 2 பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

இலங்கைக் குடியரசு பௌத்த மதத்துக்கு அதியுயர் ஸ்தானத்தை வழங்கும் அதன் பிரகாரம், பௌத்த மதத்தைப் பாதுகாத்து, போஷித்து வளர்ப்பது அரசின் கடமையாக இருந்து வரும். அதேவேளையில், பிரிவு 18(1)(ந) யின் மூலம் வழங்கப்பட்டிருக்கும் உரிமைகள் அனைத்து சமயங்களுக்கும் உறுதிப்படுத்தப்படும்.

அடிப்படை உரிமைகளின் கீழ் பிரிவு 18(1)(ந) பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

(ந) ஒவ்வொரு பிரஜையும் சிந்தனை, மனச்சாட்சி மற்றும் சமய சுதந்திரத்துக்கான உரிமையைக் கொண்டிருப்பர். இந்த உரிமை தாம் விரும்பும் ஒரு சமயத்தை அல்லது நம்பிக்கையை கொண்டிருப்பதற்கான அல்லது பின்பற்றுவதற்கான சுதந்திரம், தனிப்பட்ட முறையில் அல்லது ஏனையவர்களுடன் இணைந்து பொது இடங்களில் அல்லது தனிப்பட்ட இடங்களில் தனது சமயத்தை அல்லது நம்பிக்கையை அனுசரிப்பதற்கான, நடைமுறைப்படுத்துவதற்கான, போதிப்பதற்கான சுதந்திரம் என்பவற்றை உள்ளடக்கும்

அடிப்படை உரிமைகளின் கீழான இந்த சுதந்திரங்கள், அதே உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வரையறைகளுக்கு உள்ளாக்கப்பட முடியும் என்பதனையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

(2) இந்த அத்தியாயத்தில் வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் என்பவற்றை அனுபவித்தல் அல்லது செயற்படுத்துதல் என்பன, தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு, தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம், பொதுமக்கள் பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொது சுகாதாரப் பாதுகாப்பு அல்லது ஒழுக்க நெறிகளின் பாதுகாப்பு அல்லது ஏனையவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரம் என்பவற்றின் பாதுகாப்பு அல்லது பிரிவு 16 இல் எடுத்து விளக்கப்பட்டிருக்கும் அரச கொள்கை கோட்பாடுகளைச் செயற்படுத்தல் என்பவற்றின் அடிப்படையில் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டிருக்கும் வரையறைகளுக்கு அமைவானதாக இருந்து வரும்.

இந்த அரசியல் யாப்பு 1972ஆம் ஆண்டில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது தொடக்கம் பௌத்த மதம் தொடர்பான அத்தியாயம் குறித்த பொருள்கோடல்களின் வீச்சு, அதிகரித்து வரும் அரசியல் மற்றும் சமூக கரிசனைகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு சட்ட ரீதியான நிவாரணங்கள் கிடைப்பதனை விரிவாக்குவதற்கென வடிவமைக்கப்பட்டிருக்கும் அதே பொறிமுறைகள் - லிபரல் அரசியல் யாப்பு உருவாக்கத்தின் பாரம்பரியங்களினால் தூண்டப்பட்ட நீதித்துறை மீளாய்வு மற்றும் அடிப்படை உரிமைகள் வழக்குகள் என்பன தொடர்பான ஏற்பாடுகள் - பௌத்த மதம் தொடர்பான அரசியல் யாப்பு ரீதியான கோரிக்கைகளை முன்வைப்பதற்கான வழிமுறைகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உண்மையில் இன்று பௌத்த நலன்கள் தொடர்பாக வழக்குகளை தொடுப்பதற்கென இதன் கீழ் ஒரே சீரான, வழமையான ஒரு சட்ட ஏற்பாடு இருந்து வருவதைக் காண முடிகிறது. உண்மையில் இப்பொழுது வழக்குத் தாக்கல் செய்பவர்கள் பலர் புத்த மதத்தைப் பாதுகாப்பது எவ்வாறு என்பது தொடர்பான திட்டவட்டமான வாதங்களை முன்வைப்பதற்கென (அரசியல் யாப்பில் வழங்கப்பட்டிருக்கும்) நீதித் துறை மீளாய்வு அல்லது அடிப்படை உரிமை மனுக்கள் முறையைப் பயன்படுத்தி வருகிறார்கள். குறிப்பிட்ட ஒரு மசோதா அல்லது அரசாங்கத்தின் குறிப்பிட்ட ஒரு முன்முயற்சி, பௌத்த மதம் தொடர்பான அரசின் கடமைகளை அல்லது குறிப்பிட்ட சில அடிப்படை உரிமைகளை மீறுவதாக இருந்து வருவதாக அல்லது மீறக் கூடியதாக இருந்து வருவதாக அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் அதியுயர் ஸ்தானம் தொடர்பான மிகவும் விரிவான பொருள்கோடல்கள் 1977 இல் வண. சுமன தேரரின் வழக்குத் தீர்ப்பின் பெரும்பான்மை நீதிபதிகளின் அபிப்பிராயங்களிலும், முரண்பட்ட நீதிபதிகளின் அபிப்பிராயங்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன (உயர் நீதிமன்றத்தில் ஒரு சட்டத்தரணியாக தன்னை ஏற்று, சேர்த்துக் கொள்ள வேண்டுமென வண. சுமன தேரர் சமர்ப்பித்த விண்ணப்பம்).

### 1978 அரசியல் யாப்பு

ஜே.ஆர். ஜயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட 1978 இன் இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு, அதற்கு முன்னைய அரசியல் யாப்பிலும் பார்க்க இயல்பில் அதிகளவுக்கு எதேச்சாதிகார தன்மையை கொண்டுள்ளதாக வாதிட முடியும். இந்த அரசியல் யாப்பு பெரும்பாலான பிரிட்டிஷ் பாரம்பரியங்களை தக்கவைத்துக் கொண்ட அதே வேளையில், பல



பிரெஞ்சு மற்றும் அமெரிக்க அரசியல் யாப்பு பாரம்பரியங்களையும் உள்வாங்கியிருந்தது. அந்த விதத்தில் அது ஒரு ஆக்கபூர்வமான ஆவணமாக இருந்து வந்ததுடன், அதனை உருவாக்கியவர்களின் கருத்தின் பிரகாரம் இலங்கை சமூகத்தின் தேவைகளுக்குப் பொருந்தக் கூடியதாக இருந்து வந்தது. ஆனால், அதனை எதிர்த்தவர்கள் இவ்வாறு கருத்துத் தெரிவித்திருந்தார்கள்:

“இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு, ஐந்தாவது பிரெஞ்சு குடியரசு யாப்பை போலவே அதன் சாயலில் மட்டுமன்றி நிறுவன ரீதியான செயற்பாடுகளைப் பொருத்தவரையிலும் ஒரு கோலிஸ்ட் அரசியல் யாப்பாக இருந்து வருகிறது. எனவே, அது அந்த விதத்தில் ஜூனியஸ் ரிச்சர்ட் ஜயவர்தன என்ற தனி மனிதரின் கண்ணோட்டத்துக்குப் பொருந்தக் கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு ஆழமான சுயநலம் மற்றும் சந்தர்ப்பவாதம் என்பவற்றை பிரதிபலிப்பதுடன், கருத்தியலை உதாசீனம் செய்கின்றது. அபிவிருத்திக்கு உசிதமானது என நம்பப்படும் அத்தகைய “வலுவான நிறைவேற்றுத் தலைவர்” தொடர்பாக ஆழமாக கரிசனை கொண்டுள்ளது.” துரித பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான ஸ்திர நிலை புதிய அரசியல் யாப்பை உருவாக்கியவர்களின் முதன்மையான கரிசனை யாக இருந்து வந்தது போல் தெரிகிறது. அரசியல் ஸ்திரத்தன்மையை உருவாக்க வேண்டிய தேவை குறித் தும், வலுவான ஒரு தலைமைத்துவத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டிய தேவை குறித்தும், நாடாளுமன்றத் தின் விருப்பு வெறுப்புக்களிலிருந்து சுதந்திரமாகச் செயற்படக்கூடிய ஒரு நிறைவேற்றுத் தலைவருக்கான தேவை குறித்தும் ஜயவர்தன கருத்துகளைத் தெரிவித்தி ருந்தார். ஒரு லிபரல் ஜனநாயக சமூகத்தில் நாட்டின் நிறைவேற்றுத் தலைவர் மக்கள் பிரதிநிதிகளின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவராக இருந்து வர முடியுமா என்ற கேள்வி ஒரு புறமிருக்க, 1978 இற்கு முன்னர் இலங்கை குறிப்பாக ஸ்திரமற்றதாக இருந்து வந்ததா என்ற கேள்வியை எழுப்புவதும் பொருத்தமானதாகும். அமைதியான, சுதந்திரமான, நியாயமான தேர்தல்கள் மூலம் காலத்துக்குக் காலம் அரசாங்கங்களை மாற்றியமைப்பதனை எந்த விதத்திலும் ஸ்திரமற்ற நிலையின் ஓர் அடையாளமாக கருத முடியாது.

### பௌத்த மதம் தொடர்பான அத்தியாயம்

இலங்கை குடியரசு பௌத்த மதத்துக்கு அதியுயர் ஸ்தானத்தை வழங்குதல் வேண்டும். அதன் பிரகாரம், புத்த சாசனத்தைப் பாதுகாத்து, போஷித்து வளர்ப்பது அரசின் கடமையாக இருந்து வரும். அதே வேளையில், உறுப்புரைகள் 10 மற்றும் 14 (1) (ந) இன் மூலம் வழங்கப்பட்டிருக்கும் உரிமைகள் அனைத்துச் சமயங்களுக்கும் உத்தரவாதப்படுத்தும்.

ஒவ்வொரு ஆளும் சிந்தனை, மனச்சாட்சி மற்றும் சமய சுதந்திரத்துக்கு உரித்துடையவர் ஆவார் இது தான் விரும்பும் ஒரு சமயத்தை அல்லது நம்பிக்கையை கொண்டிருப்பதற்கான அல்லது பின்பற்றுவதற்கான சுதந்திரத்தையும் உள்ளடக்குகின்றது.

14 (1) (ந) தானே அல்லது ஏனையவர்களுடன் இணைந்து வழிபடுதல், பின்பற்றுதல், நடைமுறை மற்றும் போதித்தல் என்பவற்றின் வடிவில் பகிரங்கமாக அல்லது தனிப்பட்ட முறையில் தனது சமயத்தை அல்லது நம்பிக்கையை வெளிப்படுத்திக் காட்டுவதற்கான சுதந்திரம்

14 (யு) (3) இந்த அடிப்படை உரிமைகள் தொடர்பான வரையறைகளை கவனத்தில் எடுக்கின்றது என்ற விடயத்தை இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

(2) தேசிய பாதுகாப்பு, பிராந்திய ஒருமைப்பாடு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு, ஒழுங்கீனம் அல்லது குற்றச் செயல்களைத் தடுத்தல், சுகாதாரத்தை அல்லது ஒழுக்க நெறிகளைப் பாதுகாத்தல், ஏனையவர்களின் நன்மதிப்பு அல்லது உரிமைகளைப் பாதுகாத்தல், அந்தரங்கம், நீதிமன்ற அவமதிப்பைத் தடுத்தல், பாராளுமன்ற சிறப்புரிமைகளை பாதுகாத்தல், இரகசிய அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கும் தகவல்களை வெளிப்படுத்துவதை தடுத்தல் அல்லது நீதித் துறையின் அதிகாரத்தை மற்றும் பக்கச் சார்பற்ற நிலைமையை பராமரித்து வருதல் என்பவற்றின் நலனைக் கருத்திற் கொண்டு ஒரு ஜனநாயக சமூகத்தில் அவசியமானவை என விதித்துரைக்கப்பட்டிருக்கும் வரையறைகள் தவிர, இந்த உறுப்புரையின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் உரிமைகள் தொடர்பாக எத்தகைய வரையறைகளும் விதிக்கப்பட மாட்டாது.

பௌத்த மதத்திலும் பார்க்க (சிங்களத்தில்: புத்தாகம) புத்த சாசனத்தைத் தெரிவு செய்து கொண்டிருப்பது, புத்த பெருமானின் மதக் கோட்பாடுகளின் தனித்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. ஏனையவை அனைத்தும் வெறுமனே சமயங்களாகும். புத்த சாசனம் தெரிவு செய்யப்பட்டமை, பௌத்த மதம் தொடர்பான பிராந்திய ரீதியான வரைவிலக்கணமொன்றுக்கு சார்பாக இருந்து வந்தவர்களுக்கு ஆதரவளிப்பதாக உள்ளது. ஏனென்றால், புத்த சாசனம் என்ற பதம் புத்தரின் போதனைகளை மட்டுமன்றி அதன் ஒட்டுமொத்த மரபுரிமையையும் உள்ளடக்குகின்றது. அதாவது, சொத்துக்கள், புனித ஸ்தலங்கள், சிலைகள், விகாரைகள், ஏனைய பொருள்கள் மற்றும் புவியியல் சார்ந்த வெளிகள் என்பவற்றை அது உள்ளடக்குகின்றது. புத்த மதத்தைப் பாதுகாத்து, போஷித்து வளர்த்தல் என்ற வாசகம் தெரிவு செய்யப்பட்டதன் நோக்கம் அது பௌத்த நிறுவனங்கள் மற்றும் மடாலய வாழ்க்கை என்பவற்றின் மீதான அரச கண்காணிப்பை குறிப்புணர்த் தவோ அல்லது மறுக்கவோ இல்லை என்பதாகும்.

பௌத்த மதத்தைப் பாதுகாத்தல் என்ற இந்தக் கருத்தை - வெளிப்படையாக பௌத்த நினைவிடங்களைப் பாதுகாப்பதையும் உள்ளடக்கியதாக இருந்து வரும் இந்தக் கருத்தை - 1987, 2003 மற்றும் 2008 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற மூன்று வழக்குகளில் அவ்வழக்குகளை தாக்கல் செய்திருந்தவர்கள் முன்வைத்து, அதனை தேசிய ரீதியில் பிரபல்யமானதாகவும், சட்ட ரீதியில் செல்வாக்கு மிக்கதாகவும் ஆக்கியிருந்தார்கள். ஒவ்வொரு வழக்கிலும் முறையே இந்து தமிழர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகியோரிடமிருந்து வரும் அச்சுறுத்தல்களிலிருந்து அரசாங்கம் பௌத்த இடங்களை (விகாரைகள், வரலாற்று இடங்கள், கிராமங்கள் என்பவற்றை) பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும் என பௌத்த மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள்.

(மிகுதி நாளை)

# அனுமதியின்றி பால்மா விற்பனை விசாரணைகள் ஆரம்பமாகின!

கொழும்பு, பெப். 03

மில்கோ நிறுவனம் மனித பாவனைக்குத் தகுதியற்ற 635 மெற்றிக் தொன் பால்மாவை அனுமதியின்றி கால்நடை தீவனத்துக்காக ஒரு நிறுவனத்துக்கு விற்பனை செய்தமை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்க விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பால் மா இருப்பை ஒரு நிறுவனத்துக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், ஆனால் அந்த நடவடிக்கைகளை உடனடியாக இடைநிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விசாரணைக் குழு ஒன்றை நியமிக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, விவசாய அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்திருந்தார். அதன் பிரகாரம், ஒரு நிறுவனத்துக்கு மாத்திரம் பால் மா கையிருப்பு விற்பனை செய்வதை நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட குழு பரிந்துரைத்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அதையும் மீறி, மில்கோ நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், நிர்வாகக் குழுவின் ஒப்புதலின் பேரில், உரிய பால் மாவை தாங்கள் முடிவு செய்த நிறுவனத்துக்கு விற்பனை செய்துள்ளனர்.

அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் பரிந்துரைகளைப் புறக்கணித்து, மனித பாவனைக்கு தகுதியற்ற பால் மாவை ஒரு நிறுவனத்துக்கு விற்பனை செய்தமைக்கான காரணங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு விவசாய அமைச்சின் செயலாளர் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விரிவான விசாரணை நடத்தவும் விவசாய அமைச்சு முடிவு செய்துள்ளது. (ஐ)

# இலங்கை வருகின்றார் நேபாளத்தின் அமைச்சர்!

கொழும்பு, பெப். 03

75 ஆவது சுதந்திரதின நிகழ்வில் பங்கேற்பதற்காக நேபாளத்தின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி பிமலா ராய் பௌட்யால் வருகை தரவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் அழைப்பின் பேரில் நாட்டிற்கு வருகை தரவுள்ள நேபாள வெளிவிவகார அமைச்சர் பிமலா ராய் பௌட்யால், நாளை கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெறவுள்ள சுதந்திரதின நிகழ்வில் கலந்துகொள்வார்.

அதுமாத்திரமன்றி நாட்டின் உயர்மட்ட அதிகாரிகள் சிலரைச் சந்தித்துக் கலந்துரையாட திட்டமிட்டுள்ள அவர், இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தினால்



சுதந்திர சதுக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "லங்கார லங்கா" என்ற கலாசார நிகழ்விலும் பங்கேற்கவுள்ளார்.

மேலும் ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்திக்கவுள்ள பிமலா ராய் பௌட்யால், ஜனாதிபதியின் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உபசார நிகழ்விலும் பங்கேற்பதோடு ஞாயிறன்று மீண்டும் நேபாளம் திரும்புவார். (ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் வியாபாரி ஏறாவூரில் கைது!

மட்டக்களப்பு, பெப். 02

மட்டக்களப்பு நகர் பகுதி அரசடியைச் சேர்ந்த 24 வயதுடைய போதை வியாபாரி ஒருவரை 5 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நேற்று முன் தினம் புதன்கிழமை பிற்பகல் ஏறாவூர் சவுக்கடி பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையினருடன் இராணுவ புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து கைது செய்துள் ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத்தகவலுக்கமைய சம்பவதினமான நேற்று முன் தினம் பகல் சவுக்கடி பகுதியில் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருடன் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் இணைந்து சுற்றிவளைப்பை மேற் கொண்டனர்.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்றில் மட்டக்களப்பில் இருந்து சவுக்கடி பகுதிக்கு வியாபாரத்துக்காக போதைப்பொருளை கொண்டு சென்ற நிலையில் விசேட அதிரடிப்படையினர் வியாபாரியை மடக்கி பிடித்தபோத அவரிடமிருந்து 5 கிராம் ஐஸ் போதைப் பொருளை மீட்டதுடன் மோட்டர்சைக்கிளை கைப்பற்றினர். (அ)

# காணாமல்போன வர்த்தகர் சடலமாக நேற்று மீட்பு!

கொழும்பு, பெப். 03

கடந்த சில நாட்களாக காணாமல் போயிருந்த கொழும்பு - வெல்லம்பிட்டியை பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதான வர்த்தகர் ஒருவர் தலங்கமை பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டிடத்தின் நீச்சல் தடாகத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனது சகோதரர் ரொஷான் வன்னிநாயக்க வீடு திரும்பவில்லை என வர்த்தகரின் சகோதரி வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஜனவரி 30ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தார்.

இதன்படி, தலங்கமை - பெலவத்தையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் அவரது 3 மாடி சொகுசு கட்டடத்தில் நேற்று வியாழக்கிழமை வர்த்தகரின் சடலத்தை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

மரணத்துக்கான காரணத்தை கண்டறிய தலங்கமை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## கல்வி tv CHANNEL-1

**03.02.2023**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**03.02.2023**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பேதமற்ற இலங்கையை கட்டியெழுப்ப வேண்டும்

## அம்பாறையில் அனுரகுமார அழைப்பு

அம்பாறை, பெப். 03

"இனவாதம், மதவாதம், ஏழை, பணக்காரன் என்ற பேதமற்ற ஒரு இலங்கையை நாம் கட்டியெழுப்ப வேண்டும். அத்தகைய புதிய யுகம் ஒன்றை நோக்கிய பயணத்தை தேசிய மக்கள் சக்தி முன்னெடுத்துள்ளது."

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க கூறினார்.

நிந்தவூர் பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டிடும் வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற மக்கள் சந்தப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நிந்தவூர் பிரதேச பைக்கான முதன்மை வேட்பாளர் எம்.சம்சுன் அலி தலைமையில் நிந்தவூர் அமீர் மஹால் மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் தலைவர் அனுரகுமார திஸநாயக்க மேலும் தெரிவித்தவை வருமாறு:

பல்வேறு வளங்களையும் கொண்ட நம் நாடு ஆட்சியிலிருந்து வந்தவர்களால் குட்டிச்சுவராக்கப்பட்டு நாடும், மக்களும் இன்று பெரும் இன்னல்களுக்குள் அகப்பட்டு பரிதவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பல சந்தர்ப்பங்களில் மக்கள் வாக்களித்து அரசாங்கங்களை அமைத்தும் மக்களுக்கும், நாட்டுக்கும் விடிவற்ற நிலையே



தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மக்களைப் பிரித்தாளும் சுயநல, அரசியல்வாதிகளான ஹக்கீம், ரிஷாத் ரணில், சஜித் போன்றோரிடமிருந்து விலகி மக்கள் விடிவு பெறவேண்டும்.

இனவாதம், மதவாதம், ஏழை பணக்காரன் என்ற பேதமற்ற ஒரு இலங்கையைக் கட்டியெப்ப வேண்டிய நிலமை இன்று உருவாக்கியுள்ளது.

இந்தத் தேர்தலிலும் முஸ்லிம் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும், ராஜபக்ஷக்களைத் துரத்தவேண்டுமெனக் கூறிக்கொண்டு முஸ்லிம் தலைமைகள் வருவார்கள். மக்களை உசுப்பேத்துவார்கள்.

பின்பு அதே ராஜபக்ஷக்களிடமும், ரணிலிடமும் மண்டியிட்டு தமது வழக்கமான அரசியல் வியாபாரத்தைச் செய்வார்கள்.

இத்தகைய கள்ளக் கூட்டத்தின் சிமெந்து, தகரம், பொதிகளுக்கு இன்னும் ஏமாறும் நிலையில் மக்கள் இன்றில்லை.

2015 இல் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன, தாம் ஜனாதிபதியானதும் ராஜபக்ஷக்களை நாட்டைவிட்டு தப்பி ஓட முடியாதவாறு விமான நிலையங்களை மூடி நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

ஆனால் மூன்று வருடங்களில் மகிந்தவைப் பிரதமராக்கினர். அதே போல் மத்திய வங்கி கொள்ளை தொடர்பில் ரணிலை சிறையிலடைப்போமென்ற கோட்டாபய தரப்பினர் இன்று அவரை ஜனாதிபதியாக்கியுள்ளனர்.

ஆனால் மக்கள் பணத்தையும், நாட்டின் சொத்துக்களையும் சூறையாடி நாட்டையும், மக்களையும் இன்றைய வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வந்தவர்களைத் தண்டிக்கத்தக்க சக்தி தேசிய மக்கள் சக்தியிடமே உண்டு என்பதையும் மக்கள் இன்று உணர்ந்துள்ளனர்.

மக்கள் நம்பிக்கையை நாம் பாதுகாப்போம், மக்கள் அளிக்கும் வாக்குகளுக்குரிய மதிப்பையும், கௌரவத்தையும் நாம் தருவோம், புதிய மாற்றம் செய்வோம் - என்றார். (அ-06)

# காரைதீவு கலைஞர்களுடன் பிரதேச செயலாளர் சந்திப்பு





அம்பாறை, பெப். 03

காரைதீவு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கலைஞர்களுடன் பிரதேச செயலாளர் சந்திப்பொன்றை நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்கொண்டார்.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய பல கலைத் திட்டங்களை முன்வைத்து உரையாற்றினார்.

கலாசார உத்தியோகத்தர்களான கே.சதாகரன் மற்றும் எஸ். சிவசோதி சந்திப்பின் நோக்கம் பற்றி குறிப்பிட்டார்கள்.

எதிர்காலத்தில் ஈசஞ்சிகை மற்றும் காரணீகம்2 வெளியிடல் , ஆவணப் புத்தகம் கலை மன்றங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

முதலில் கலைஞர்களின் விவரம் திரட்டப்பட்டு வகைப்படுத்தப்படவுள்ளது. (அ)

# கல்முனை ஸாஹிரா கல்லூரிக்கு பிரதி பொலிஸ்மா அதிபர் விஜயம்



அம்பாறை, பெப். 03

அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீ கல்முனை ஸாஹிரா கல்லூரிக்கு விஜயம் செய்து கல்லூரியில் ரென்னிஸ் விளையாட்டரங்கை அமைக்க ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு உதவுவதாக உறுதியளித்துள்ளார்.

கல்முனை ஸாஹிறாக் கல்லூரியில் ரென்னிஸ் விளையாட்டை அறிமுகப்படுத்தி, மேம்படுத்துவது குறித்தும், அதற்காக ரென்னிஸ் விளையாட்டரங்கொன்றினை கல்லூரியில் அமைப்பது குறித்தும் கலந்துரையாடுவதற்காக, அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தமயந்த விஜயசிறி கடந்த செவ்வாய்க்கிழமை அன்று கல்முனை ஸாஹிறாக் கல்லூரிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இலங்கை ரென்னிஸ் சங்கத்தின் உறுப்பினர் என்ற வகையில், அம்பாறை மாவட்டத்தின் முன்னணி பாடசாலைகளுள் ஒன்றாகிய கல்முனை ஸாஹிறாவில், ரென்னிஸ் விளையாட்டரங்கை அமைப்பதில் தான் முன்னின்று செயலாற்றவுள்ளதாகவும், இதற்காக இலங்கை ரென்னிஸ் சங்கத்தின் ஒத்துழைப்பு பெறப்படுமெனவும் பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

கல்லூரியில் இதற்கான இடத்தை அடையாளம் காண்பது தொடர்பிலும், இதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலுமான முதற்கட்டக் கலந்துரையாடல் கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் இடம்பெற்றது.

தொடர்ந்தும் அடுத்த கட்டக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு, விரைவில் கல்லூரியில் ரென்னிஸை அறிமுகப்படுத்துவதென பிரதிப் பொலிஸ்மா அதிபர் உறுதியளித்தார்.

கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ. எல்.ஏ.வாஹிட் கல்லூரியின் பிரதி அதிபர்கள், முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்க மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பாடசாலை பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# உணவு உற்பத்தியை ஊக்குவிக்க அரச அதிபர் திருக்கோவில் விஜயம்



அம்பாறை, பெப். 03

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு திருக்கோவில் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டு வரும் உணவு பாதுகாப்பு மற்றும் உணவு உற்பத்தி கிராமங்களை உருவாக்கும் தேசிய வேலைத் திட்டத்தைப் பார்வையிட அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் நேற்று முன்தினம் திருக்கோவிலுக்கு விஜயம் செய்தார்.

தேசிய வேலைத் திட்டத்தின்கீழ் திருக்கோவில் பிரதேசத்தில் தங்கவேலாயுதபுரம் மற்றும் கஞ்சிகுடிச்சாறு கிராம விவசாயிகளினால் பரீட்சார்த்தமாக பயிரிடப்பட்டுள்ள கரட் பீட்றூட் சிவப்புக் கோவா மற்றும் வெள்ளைக் கோவா, உருளைக்கிழங்கு போன்ற மலைநாட்டு மரக்கறிப் பயிர் களின் சம்பிரதாயபூர்வமான அறுவடை நிகழ்வும் இடம் ஶ்ரீபெற்றது.

மலையக மரக்கறிகளின் விளைச்சல் கண்டு அரச அதிபர் டக்ளஸ் வியந்தார். உணவு உற்பத்தி மாதிரி கிராமங்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்களை அவர் பார்வையிட்டார்.

இக் கள விஜயமானது திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனின் ஒழுங்கமைப்பில் திருக்கோவில் தங்கவேலாயுதபுரம் மற்றும் கஞ்சிகுடியாறு மீள்குடியயேற்ற விவசாய உணவு உற்பத்தி மாதிரி கிராமங்களை மையப்படுத்தியதாக அமைந்தது.

இக் களவிஜயத்தின்போது அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனஸ் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் உதவி திட்டமிடல் பணிப்பாளர் அனோஜா உஷாந் உள்ளிட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டினர். (அ)

# சுதந்திர தின சிரமதானம் காரைதீவில்

அம்பாறை, பெப். 03

75ஆவது சுதந்திர தின நிகழ்வினை முன்னிட்டு காரைதீவு பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பிரதேசங்களில் சிரமதான நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜனின் வழிகாட்டுதலின் கீழ் இவை நடைபெற்று வருகின்றன.

காரைதீவு மாளிகைக்காடு மாவடிப்பள்ளி ஆகிய பிரிவுகளில் சிரமதான நிகழ்வுகளும்,காரைதீவு மயானத்திற்கு அருகாமையில் மரங்களுக்கு வேலி அமைக்கின்ற நிகழ்வும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் சுகாதார அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவை உத்தியோகத்தர், அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமூகம் சார்ந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் மதஸ்தலங்களின் பிரதிநிதிகள், தன்னார்வ குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பங்கேற்றனர். (அ)



# உக்ரைனுக்கான இராணுவ உதவி பின்னடிக்கிறார் இஸ்ரேல் பிரதமர்

## மத்தியஸ்தராக செயல்பட விருப்பம் என்று தெரிவிப்பு

ஜெருசலேம், பெப். 03

உக்ரைனுக்கு இராணுவ உதவிகளை வழங்குவது குறித்து தான் சிந்திப்பதாகவும் உக்ரைன் விவகாரத்தில் ஒரு மத்தியஸ்தராக செயற்பட விரும்புவதாகவும் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹூ கூறியுள்ளார்.

ரஷ்யாவுடன் இஸ்ரேல் நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ளது. இஸ்ரேலின் அயல்நாடான சிரியாவின் வான் பரப்பை ரஷ்யா கட்டுப்படுத்துகிறது. அதே வேளை, ஈரான் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களையும் ரஷ்யா கண்டுகொள்வதில்லை.

இந்நிலையில், சி.என்.என் தொலைக்காட்சிக்கு நெத்தன்யா/ஹ நேற்று அளித்த செவ்வியொன்றில், ஏவுகணைத் தாக்குதல்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இஸ்ரேலுக்கு வழங்கப்பட்ட அமெரிக்கத் தொழில்நுட்பத்துடனான அயர்ன்டோம் வான் பாதுகாப்பு பொறிமுறை போன்றவற்றை உக்ரேனுக்கு இஸ்ரேல் வழங்குமா என கேட்கப்பட்டது.

அப்போது, நிச்சயமாக நாம் இதை ஆராய்கிறோம்“ என நெத்தன்யாஹூ பதிலளித்தார்.

இஸ்ரேலில் வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி ஆட்லறிகளை யுக்ரைனுக்கு அமெரிக்கா அனுப்பியுள்ளதாக நெத்தன்யாஹூ கூறினார்.

அதேவேளை, யுக்ரைனுக்கு எதிராக பயன்படுத்தப்படும், ஈரானினால் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை தான் இங்கு பட்டியலிடப் போவதில்லை எனவும் அவர் கூறினார்.



குறைந்த விலை ஆளற்ற விமானங்களை, உக்ரைன் மீதான படையெடுப்புக்காக ரஷ்யாவுக்கு ஈரான் விற்பனை செய்ததாக யுக்ரைனுக்கும் மேற்குலக நாடுகளும் கூறுகின்றன. ஆனால், இதை ஈரான் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பின் பின்னர், உத்தியோகபூர்வமற்ற வகையில் மத்தியஸ்தர் பாத்திரம் வகிக்குமாறு தான் கோரப்பட்டதாகவும், ஆனால், அப்போது தான் எதிர்க்கட்சித் தரப்பில் இருந்ததால் அதை தன்னால் செய்ய முடியவில்லை எனவும் நெத்தன்யாஹூ கூறினார்.

எனினும், சம்பந்தப்பட்ட தரப்புகளும் அமெரிக்காவும் கோரினால் அதை தான் ஏற்றுக்கொள்ளத் தயார் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# ரஷ்ய ஊடகவியலாளருக்கு 8 வருட சிறைத் தண்டனை



மொஸ்கோ, பெப். 03

வெளிநாட்டில் வசிக்கும் ரஷ்ய ஊட கவியலாளர் ஒருவ ருக்கு 8 வருட சிறைத் தண்டனை விதித்து ரஷ்ய நீதிமன் றமொன்று நேற்று தீர்ப்பளித்துள்ளது. உக்ரைன் மீதான ரஷ் யாவின் இராணுவ நடவடிக்கையை விமர்சித்தமைக்காக இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

64 வயதான அலெக்ஸாண்டர் நெவ்ஸோரோவ் எனும் ஊடகவியலளாருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனின் தென் பகுதியிலுள்ள மரியுபோலிலுள்ள மகப்பேற்று வைத்தியசாலை மீது ரஷ்ய படையினர் வேண்டுமென்றே ஷெல் தாக்குதல் நடத்தியதாக நெவ்ஸோரோவ் குற்றம் சுமத்தியிருந்தார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை தொடர்பில் அவர் பொய்யான தகவல்களைப் பரப்புவதாக ரஷ்ய அதிகாரிகள் குற்றம் சுமத்தினர்.

நெவ்ஸோரோவுக்கு எதிராக ரஷ்ய நீதிமன்றமொன்றில் நடைபெற்ற வழக்கில் அவர் பங்குபற்றவில்லை. ஏற்கெனவே அவர் ரஷ்யாவிலிருந்து வெளியேறியிருந்தார்.

இந்நிலையில், நெவ்ஸோரோவை குற்றவாளியாகக் கண்ட நீதிமன்றம், அவருக்கு 8 வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. (அ)

# மிகப் பெரிய தாக்குதலை பெப். 24 ரஷ்யா தொடங்கும்

## உக்ரைன் அமைச்சர் எச்சரிக்கை



கீவ், பெப். 03

ரஷ்யா எதிர்வரும் 24ஆம் திகதி மிகப்பெரிய பெரிய தாக்குதலை தொடங்கும் என உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சர் ஒலெக்ஸி ரெஸ்னிகோவ் எச்சரித்துள்ளார்.

இந்த தாக்குதலுக்காக ரஷ்யா ஆயிரக்கணக்கான துருப்புக்களைக் குவித்துள்ளதாகவும், கடந்த ஆண்டு ஆரம்பப் படையெடுப்பின் ஆண்டு நிறைவைக் குறிக்க ஏதாவது முயற்சி செய்யலாம் என்றும் அவர் கூறினார்.

இந்த தாக்குதல் பெப்ரவரி 23ஆம் திகதி இராணுவத்தை கொண்டாடும் ரஷ்யாவின் தந்தையின் பாதுகாவலர் தினத்தையும் குறிக்கும்.

இதற்கிடையில், கிராமடோர்ஸ்க் நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர்.

டொனெட்ஸ்க் பகுதியில் உள்ள நகரத்தில் ரஷ்ய ஏவுகணை ஒன்று குடியிருப்பை தாக்கியதில் மேலும் 8 பேர் காயமடைந்தனர் என மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

மீட்புப் படையினர் இடிபாடுகளை அப்புறப்படுத்துவதால் உயிரிழப்பு எண்ணிக்கை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# பொது இடத்தில் நடனமாடிய ஜோடிக்கு 10 ஆண்டு சிறை!

தெஹ்ரான், பெப். 03

பொதுவெளியில் நடனம் ஆடிய இணையருக்கு 10 ஆண்டு சிறைத் தண்ட னையை ஈரான் நீதிமன்றம் விதித்துள்ளது.

ஈரான் தலை நகர் தெஹ்ரானில் உள்ள பொது சதுக்கத்தின் முன் அஸ்தி யாஜ் ஹகிகி மற்றும் அவரது வருங்கால கணவர் அமீர் முகமது அஹ்மதி இருவரும் நடனம் ஆடி வீடியோ பதிவு செய்து வெளியிட் டனர். மேலும், இந்த வீடியோவில் அஸ்தியாஜ், ஹிஜாப் அணியாமல் இருந்தார்.

ஈரானில் பெண்கள் பொதுவெளியில் நடனம் ஆடக்கூடாது என்று கூறப்படும் நிலையில், அஸ்தியாஜ் மற்றும் அமீர் முகமது ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இருவருக்கும் ஈரான் நீதிமன்றம் 10 ஆண்டு சிறைத் தண்டனை விதித்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# 2023 பிரிட்டன் பொருளாதாரம் 0.6 வீத வீழ்ச்சியைச் சந்திக்கும்!

## சர்வதேச நாணய நிதியம் கணிப்பு

நியூயோர்க், பெப். 03

2023ஆம் ஆண்டில் பிரிட்டன் பொருளாதாரம் 0.6 சதவீத வீழ்ச்சியை சந்திக்கும் என சர்வதேச நாணய நிதி யம் கணித்துள்ளது.

வாழ்க்கைச் செலவு குடும்பங்களைத் தாக்கி வருவ தால், பிரித்தானியப் பொருளாதாரம் சுருங்கி மற்ற முன்னேறிய பொருளாதாரங்களைக் காட்டிலும் மோசமாகச் செயல்படும் என அது கூறியுள்ளது.

எவ்வாறாயினும், இலையுதிர்கால அறிக்கைக்குப் பிறகு பிரித்தானிய பொருளாதாரம் இப்போது சரியான பாதையில் இருப்பதாக நினைக்கிறது என்றும் நாணய நிதியம் கூறியது.

இதனிடையயே, திறைசேரியின் தலைவர் ஜெரமி ஹன்ட், கடந்த ஆண்டு பல முன்னறிவிப்புகளை பிரித் தானியா விஞ்சியது என கூறினார்.

அதன் உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் புதுப்பிப்பில், பொருளாதார வளர்ச்சியை நிலைப்படுத்த வேலை செய்யும் நாணய நிதியம், பிரிட்டனின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, இந்த ஆண்டு 0.3 சதவீத வளர்ச்சியைக் காட்டிலும் சுருங்கும் என்று கூறியது.

உலகின் முன்னேறிய மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களில், ஒரு வருடத்தில் மொத்த உள்நாட்டு உற் பத்தியில் சரிவை சந்திக்கும் ஒரே நாடாக பிரிட்டன் இருக்கும் என்று அது கணித்துள்ளது.

நாணய நிதியம், தனது புதிய முன்னறிவிப்பு பிரிட் டனின் உயர் எரிசக்தி விலைகள் மற்றும் அதிக பணவீக்கம் போன்ற நிதி நிலைமைகளை பிரதிபலிக்கிறது என்று கூறியது. (அ)

# எவ் 16 ரக போர் விமானங்களை உக்ரைனுக்கு வழங்க மாட்டோம்!

வாஷிங்டன், பெப். 03

ரஷ்யாவுடன் சண்டையிடுவதற்காக தங்களது அதிநவீன எவ்-16 ரக போர் விமானங்களை உக்ரைனுக்கு அளிக்கப் போவதில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், உக்ரைனுக்கு அமெரிக்காவின் எவ்-16 விமானங்கள் அனுப்பப்படுமா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.



இதற்கு அவர் ‘அனுப்பப் படாது’ என்று திட்டவட்டமாக பதிலளித்தார்.

உக்ரைன் மீது அயல்நாடான ரஷ்யா கடந்த ஆண்டு பெப். 24ஆம் திகதி முதல் போர் நடத்தி வருகிறது. அந்தநாட்டின் பல நகரங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

இந்நிலையில், உக்ரைன் ஜனாதிபதி நவீன ஆயுதங்களை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிடம் கோரியுள்ளார். ஜேர்மனியின் அதிசக்தி வாய்ந்த லெப்பர்ட்-2 பீரங்கிகளை உக்ரைன் கோரிய போதும் ரஷ்யாவின் எதிர்வினையால் அவற்றை அனுப்ப அந்த நாடு




தயக்கம் காட்டியது. எனினும், தற்போது அந்தப் பீரங்கிகளை அனுப்ப அந்த நாடு தயாராகியுள்ளது.

இதேசமயம், அமெரிக்கா தனது அதிநவீன எம் 1 அப்ரம்ஸ் ரக பீரங்கிகளை உக்ரைனுக்கு அனுப்புவதாக உறுதியளித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நியூசிலாந்தை வீழ்த்தி இந்தியா இமாலய வெற்றி!

## தொடரையும் கைப்பற்றியது



அகமதாபாத், பெப். 03

நியூசிலாந்துக்கு எதிரான கடைசி மற்றும் மூன்றாவது இருபது -20 போட்டியில் இளம் வீரர் ஷுப்மன் கில்லின் சூறாவளி ஆட்டத்தால் 168 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று தொடரையும் 2-1 என கைப்பற்றியது இந்தியா.

முதலில் ஆடிய இந்திய அணி 234/4 ஓட்டங்களை குவித்தது. பின்னர் ஆடிய நியூசிலாந்து அணி. 66 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து படு தோல்வி அடைந்தது.

நேற்று முன்தினம் அகமதாபாத்தில் நடந்த இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு இஷான் கிஷன் - ஷுப்மன் கில் இணை தொடக்கம் கொடுத்தது.

பிரேஸ்வெல் பந்தில் ஓர் ஓட்டத்துடன் எல். பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார் இஷான். ஷுப்மன் கில் - ராகுல் திரிபாதி இணை நியூசிலாந்து அணியின் பந்துவீச்சை பதம் பார்த்தது. சிக்ஸர், பௌண்ட்ரிகள் என நாலாபுறமும் பந்துகளை விரட்டியது. 3 சிக்ஸர், 4 பௌண்ட்ரியுடன் 22 பந்துகளில் 44 ஓட்டங்களை விளாசி இஷ் சோதி பந்தில் ஆட்டமிழந்தார் திரிபாதி.

இதன்பின்னர் ஆட வந்த சூரியகுமார் யாதவ் 2 சிக்ஸர், ஒரு பௌண்ட்ரியுடன் 24 ஓட்டங்களையும் ஹார்திக் பாண்ட்யா ஒரு சிக்ஸர், 4 பௌண்ட்ரியுடன் 30 ஓட்டங்களை விளாசி பெவிலியன் திரும்பினர்.

மறுமுனையில் அதிரடியாக ஆடிய ஷுப்மன் கில் 7 சிக்ஸர், 12 பவுண்டரியுடன் 63 பந்துகளில் 126 ஓட்டங்களை விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தார். இது ஷுப்மன் கில்லின் முதல் இருபது -20 சதமாகும். தீபக் ஹூடா 2 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் இந்தியா 4 விக்கெட்கள் இழப்புக்கு 234 ஓட்டங்களை குவித்தது. நியூசிலாந்து தரப்பில் பிரேஸ்வெல், டிக்னர், சோதி, மிச்செல் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

235 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக இருந்தது.

தொடக்க துடுப்பாட்ட வீரர்கள் பின் அலன் 3, டேவன் கொன்வே 1, மார்க் சாப்மேன் 0, கிளென் பிலிப்ஸ் 2, பிரேஸ்வெல் 8, மிச்செல் சாண்ட்னர் 13, இஷ் சோதி 0, லக்கி பெர்குஷன் 0, பிளேர் டிக்னர் 1 என சொற்ப ஓட்டங்களுடன் இந்தியாவின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் வந்த வேகத்திலேயே வெளியேறினார்.

சகலதுறை வீரர் டரில் மிற்செல் கடைசி வரை போராடி 35 ஓட்டங்களை எடுத்து இறுதி விக்கெட்டாக வெளியேறினார். 12.1 ஓவர்களில் நியூசிலாந்து 66 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இந்திய அணி 168 ஓட்டங்கள் என்ற மிகப்பெரிய வித்தியாசத்தில் நியூசிலாந்தை வீழ்த்தி தொடரையும் 2-1 என கைப்பற்றியது.

பந்துவீச்சில் ஹார்திக் பாண்ட்யா 4 விக்கெட்களையும், அர்ஷ்தீப் சிங், உம்ரன் மாலிக், சிவம் மவி ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர். (ஐ)



# இனிமேல் சாதிக்க எதுவுமே இல்லை!

## மெஸ்ஸி தெரிவிப்பு

பாரிஸ், பெப். 03

இனிமேல் சாதிப்பதற்கு எதுவுமில்லை என ஆர்ஜென்ரீனாவின் உதைபந்தாட்ட ஜாம்பவான் லயனல் மெஸ்ஸி கூறியுள்ளார்.

கட்டாரில் கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற பிபா உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி இறுதி ஆட்டத்தில் பிரான்ஸை வீழ்த்தி உலக சம்பியன் பட்டத்தை மூன்றாவது முறையாக மெஸ்ஸி தலைமையில் கைப்பற்றியது ஆர்ஜென்ரீனா.

மெஸ்ஸியின் வசம் 7 பலன் டி ஒர் விருதுகள், 4 யு. இ. எவ். ஏ. சம்பியன்ஸ் லீக் பட்டம், கோபா அமெரிக்கா பட்டம் உள்ளிட்டவை இருந்தன. ஆனால் உலகக் கிண்ணம் இல்லாமல் வேதனை அடைந்திருந்தார் மெஸ்ஸி.

இந்நிலையில் உலக சம்பியன் பட்டத்தை கைப்பற்றி விட்டார். இதுதொடர்பாக அவர் புதன்கிழமை கூறியதாவது:

எனது உதைபந்தாட்ட வாழ்க்கையில் அனைத்தையும் பெற்று விட்டேன். நான் உதைபந்தாட்டம் ஆடத் தொடங்கிய போது, இவை எல்லாம் நடக்கும் என எதிர்பார்க்கவில்லை. கடந்த 2021இல் கோபா அமெரிக்கா பட்டத்தை வென்றோம். தற்போது உலகக் கிண்ணத்தையும் கைப்பற்றி விட்டோம். எங்கள் ஜாம்பவான் டியாகோ மரடோனா கையில் உலகக் கிண்ணத்தைப் பெற்றிருந்தால் மிகவும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும்.

எனது உதைபந்தாட்ட வாழ்க்கையை சிறப்பாக நிறைவு செய்ய வேண்டும். இனிமேல் சாதிப்பதற்கு எதுவுமில்லை என்றார் மெஸ்ஸி.




# அணியுடன் இணைந்தார் ஆஸியின் உஸ்மான் கவாஜா

பெங்களூர், பெப். 03

நுழைவு இசைவு (வீசா) கிடைக்காததால் அணியை விட்டு தனித்த அவுஸ்திரேலியாவின் கவாஜா இந்தியாவுக்கு வந்து அணியுடன் இணைந்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்து 4 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. இந்தத் தொடர் வரும் 9ஆம் திகதி தொடங்குகிறது.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவின் பிரபல துடுப்பாட்ட வீரர் நுழைவு இசைவு கிடைக்காததால் இந்தியாவுக்கு உடனடியாக வரமுடியாத சூழல் ஏற்பட்டது. இதனால், அவரை அணியின் ஏனைய வீரர்கள் இந்தியாவுக்கு நுழைந்தனர்.

இந்நிலையில், நேற்று அவருக்கு நுழைவு இசைவு அளிக்கப்பட்டது. இதையடுத்து அவர் விமானம் மூலமாக பெங்களூர் வந்து அணியினருடன் இணைந்து கொண்டார். (ஐ)

# தென்னாபிரிக்காவுடனான போட்டி! இங்கிலாந்து அணி ஆறுதல் வெற்றி!

கேப்டவுன், பெப். 03

59 ஓட்டங்களால் தென்னாபிரிக்காவை வீழ்த்தி இங்கிலாந்து அணி ஆறுதல் வெற்றி பெற்றுள்ளது.

தென்னாபிரிக்கா-இங்கிலாந்து அணிகள் மோதிய 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி கிம்பர்லியில் நேற்று பகல்-இரவாக நடந்தது.

முதலில் ஆடிய இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 346 ஓட்டங்களை குவித்தது. தொடக்க வீரர் டேவிட் மலன், அணித் தலைவர் ஜோஸ் பட்லர் சதம் அடித்தனர். மலன் 114 பந்துகளில் 118 ஓட்டங்களும் (7 பௌண்ட்ரி, 6 சிக்ஸர்), பட்லர் 127 பந்துகளில் 131 ஓட்டங்களும் 16 பௌண்ட்ரி, 7 சிக்ஸர், மொயீன் அலி 23 பந்தில் 41 ஓட்டங் களும் (2 பௌணட்ரி, 4 சிக்ஸர்) எடுத்தனர்.

நிகிடி 4 விக்கெட்களும், மார்கோ ஜோன்சன் 2 விக்கெட்ஷகளும் கைப்பற்றி னார்கள். பின்னர், விளையாடிய தென்னாபிரிக்கா 43 - ஓவர்களில் 287 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதனால் 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

முதல் 2 போட்டியிலும் தோற்ற இங்கிலாந்து ஏற்கனவே தொடரை இழந்திருந்தது. இதனால் அந்த அணிக்கு இந்த வெற்றி ஆறுதல் அளிப்பதாக இருந்தது.

ஹென்ரிச் கிளாசன் 62 பந்துகளில் 80 ஓட்டங்களும் (7 பௌண்ட்ரி, 2 சிக்ஸர்) ஹென்ட்ரிக்ஸ் 52 ஓட்டங்களும் 6 பௌண்ட்ரி) எடுத்தனர். ஜோப்ரா ஆர்ச்சர் அபாரமாக பந்து வீசி 68 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்களை வீழ்த்தினார். ஆதில் ரஷூதுக்கு 3 விக்கெட்கள் கிடைத்தன.



# புற்றுநோய்க்கான மருந்துகளை கொண்டுவர 6 மாதங்கள் ஆகும்!

## புற்றுநோய் கட்டுப்பாட்டு பிரிவு கூறுகிறது



கொழும்பு, பெப். 03

**புற்றுநோயாளர்களுக்கான சிகிச்சைக்காக உலக சுகாதார ஸ்தாபனத்திடம் இருந்து பெறப்படவுள்ள மருந்துகள் மேலும் ஆறு மாதங் களுக்கு தாமதமாகும் என தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் இஷானி பெர்னாண்டோ தெரிவித்தார்.**

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மருந்துகளை வாங்குவதற்கான கொள்முதல் நடவடிக்கைகளுக்கு கால அவகாசம் தேவைப்படுவதே இதற்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், வைத்திய சாலைகளில் புற்றுநோய்க்கான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மார்பக புற்றுநோய் மற்றும் தைராய்ட் புற்றுநோய் மற்றும் நுரையீரல் புற்றுநோயை எளிதில் குணப்படுத்த முடியும் எனவும் வைத்தியர் இஷானி பெர்னாண்டோ கூறினார்.

முக்கிய மார்பக புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் மையமானது நாரஹேன்பிட்டியில் உள்ளதாகவும் இரத்தினபுரி, யாழ்ப்பாணம் மற்றும் மாத்தறை வைத்தியசாலைகளில் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் சிகிச்சை நிலையங்கள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# காட்டு யானைகளால் விவசாயிகளுக்கு அழிவு

முல்லைத்தீவு, பெப். 03

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட விசுவமடு - நாச்சிகுடா பகுதியில் கடந்த சில தினங்களாக இரண்டு காட்டு யானைகள் பயிர்களை தும்சம் செய்து வருகின்றன.

இதனால், அப்பகுதியில் உள்ள மக்கள் மேற்கொண்ட மேட்டு நில பயிர்ச் செய்கையில் அழிவு ஏற்பட்டுள்ளது.

தற்போது பூசனிச்செடிகள் காயும் பிஞ்சுமாக உள்ள நிலையில் இவ்வாறு காட்டு யானைகள் அழிவு ஏற்படுத்தியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், காட்டு யானைகள் இருபதிற்கும் மேற்பட்ட தென்னங்கன்றுகளையும் முற்று முழுதாக அழித்துள்ளன. (அ)



# மகாநாயக்க தேரர்களிடம் ஆசி பெற்றார் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் மல்வத்து, அஸ்கிரி மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்றார்.

முதலில் மல்வத்து மகா விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அங்கு, வணக்கத்துக்குரிய திப்பட்டுவாவே சிறி சுமங்கல மகாநாயக்க தேரரை சந்தித்து நலம் விசாரித்ததோடு அட்டப்பிரிகரவையும் அவருக்கு அன்பளித்தார்.

மல்வத்து மகாநாயக்க தேரர் தலைமையிலான மகாசங்கத்தினர் ஜனாதிபதிக்காக பிரித் பாராயணம் செய்து ஆசீர்வதித்ததோடு மல்வத்து மகா நாயக்க வணக்கத்துக்குரிய திப்பட்டுவாவே சிறி சுமங்கல தேரர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசேட நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

அதனையடுத்து அஸ்கிரி மகா விகாரைக்கு சென்ற ஜனாதிபதி, அஸ்கிரி பீட மகா நாயக்க தேரர் வணக்கத்துக்குரிய வரகாகொட சிறி ஞானரத்ன தேரரைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அஸ்கிரி மகா விகாரையின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி கேட்டறிந்ததோடு, அஸ்கிரி மகா நாயக்க தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசீர்வாதம் வழங்கினார்கள்.

(அ)

# 3 பேரின் கடவுச்சீட்டு வைத்திருந்த இருவர் பத்தரமுல்லையில் கைது!

கொழும்பு, பெப். 03

பத்தரமுல்லையில் வேறு நபர்களுக்குச் சொந்தமான கடவுச்சீட்டுகளை வைத்திருந்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தலங்கம பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளபட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள் கைது செய்யப்படும்போது, பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகத்துக்கு வந்திருந்த மூன்று பேரின் கடவுச்சீட்டுகள் அவர்களிடம் இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இருவரும் 63 மற்றும் 68 வயதுடையவர்கள் எனவும், அவர்கள் வத்தளை மற்றும் கொழும்பு 11 ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# உயர்தரப் பரீட்சைக் காலத்தில் மின்வெட்டு சட்டவிரோதமானது

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, பெப். 03

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நாட்டில் பெப்ரவரி 17ஆம் திகதி வரை மின்வெட்டுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், அந்தக் காலப்பகுதியில் மின்வெட்டு ஏற்பட்டால், அது அங்கீகரிக்கப்படாத மற்றும் சட்ட விரோதமானதாக கருதப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மின் உற்பத்திக்காக மின் உற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களில் இருந்து மேலதிக நீரை இனி வெளியிட முடியாது என மகாவலி அதிகார சபை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

அதன்படி, நேற்று முன்தினம் முதல் தினமும் இரண்டு மணித்தியாலங்கள் 20 நிமிடங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்படுவதற்கு இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அனுமதி கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மின்வெட்டுகளை தடுக்க உரிய தரப்பினருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு என்பன உயர் நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் மனுக்களை தாக்கல் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# மைத்திரிபால சிறிசேனவுக்கு சவால் விடுகிறார் சாமர சம்பத்

கொழும்பு, பெப். 03

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் தாமும் தேர்தலில் போட்டியிட்டு முன்னாள் ஜனாதிபதியை விட ஒரு வாக்கையேனும் கூடுதலாக பெறுவதாக சாமர சம்பத் பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்துள்ள ஹெலிகொப்டரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பலமானவர்களும் முன்னாள் ஜனாதிபதியின் இந்தக் கருத்தை விமர்சித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அண்மைக் காலமாக கூறி வருகின்றார்.

இருந்தபோதும், அவரின் இந்த தீர்மானத்தை பலரும் விமர்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# சிறைக் கைதிகள் தப்பியோட்டம்!

கொழும்பு, பெப். 03

மொரவக்க நீதவான் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட இரு கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று முன் தினம் சிறைச்சாலை அதிகாரிகளின் பிடியில் இருந்து தப்பிச் சென்றனர் என மேலதிக சிறைச்சாலை ஆணையாளரும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தப்பிச்சென்ற கைதிகளை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு 84 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

கொழும்பு, பெப். 03

இந்த ஆண்டு நான்கு முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் முன்னாள் முதல் பெண்மணியின் பராமரிப்புக்காக அரசாங்கம் 84 மில்லியன் ரூபாய்க்கு மேல் ஒதுக்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு அதிகூடிய தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரில் ஒவ்வொருவருக்கும் தலா 23 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு 15 மில்லியன் ரூபாயும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 14 மில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், முன்னாள் முதல் பெண்மணி ஹேமா பிரேமதாஸவுக்கு 08 மில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (அ)

## வடக்கில்...

முன்னர் இந்தக் காணிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழிக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## எரிவாயு...

கிலோ சிலிண்டரின் விலை 200-300 ரூபாயாலும், 2.3 கிலோ சிலிண்டரின் விலை 100 ரூபாயாலும் அதிகரிக்கப்படும் என்றும் அறிய வருகின்றது.

எனினும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையே உத்தியோகபூர்வமான அறிவிப்பு வெளியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கட்சிகள்...

என்று தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் தனது இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசு கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஓர் அங்கத்துவ கட்சியாக இருந்து எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் ஒரு புதிய அணுகு முறையை சிபாரிசு செய்திருக்கின்றார்கள்.

அதாவது இந்த தேர்தல் வட்டார அடிப்படையிலும் விகிதாசார அடிப்படையிலும் பிரதிநிதிகளை தெரிவு செய்கின்ற அந்த முறையில் ஒரு புதிய அணுகல் முறையை நாங்கள் பரீட்சித்து பார்க்க வேண்டும் - அதில் வெற்றி பெற வேண்டும் என்று எங்கள் கட்சி வேண்டுகோள் விடுத்திருந்தது. இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழு அந்த சிபாரிசை செய்திருந்தது.

அந்த சிபாரிசின் அடிப்படையில் தமிழ் தேசிய கூட்டமைப்பிலே அங்கம் வகிக்கின்ற கட்சிகள் ஒவ்வொருவரும் தனித்தனியாக தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் அனைவருமாக இணைந்து பெரும்பான்மையை பெற்று ஆட்சி அமைக்கலாம் என்று புதிய அணுகுமுறையை செயல்படுத்த விரும்பினோம். ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலே அங்கம் வகிக்கின்ற கட்சிகள் அதில் அதிகம் விருப்பம் இல்லாமல் இருந்தார்கள்.

தேர்தலின் பின்னர், நாங்கள் ஒவ்வொருக்கொருவர் முரண்படாமல் பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் வட, கிழக்கில் ஒன்றுபட்டு ஆட்சியை அமைப்போம். இதற்காக, எங்கள் மத்தியில் உள்ள முரண்பாடுகள் ஏற்படாமல் - பிளவுகள் ஏற்படாமல் - ஒற்றுமையாக நாங்கள் மீண்டும் கூடி வட, கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைப்பதற்கு ஓர் அணுகல் முறையை கடைப்பிடிக்க வேண்டும் என கோரி இருக்கின்றோம்.

கட்சியின் மூத்த உறுப்பினர்கள் - ஏனைய கட்சிகளை விமர்சித்தல், முரண்பட்ட கருத்துகளை வெளியிடுதல் போன்ற செயல்பாடுகள் அண்மை நாட்களில் அதிகரித்து வருகின்றன. இந்த வகையில் தமிழரசு கட்சியின் தலைவர் என்ற ரீதியில் நான் நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம் சுமத்துகின்றார்கள். இன்று (நேற்று) காலையிலும் எனக்கு பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன

சுமந்திரனின் அறிக்கை, தவராசாவின் அறிக்கையின் அடிப்படையிலும் மிகவும் அதிருப்தி அடைந்த மக்கள், அவர்களின் பிரதிநிதிகள், கட்சி பிரதிநிதிகள் என்னிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த மாதம் 11, 12இல் மத்திய செயல்குழு கூட்டம் கூட்டப்பட்டு கட்சியை பிளவுபடுத்தக்கூடிய வார்த்தை பிரயோகங்களை பிரயோகித்தவர்கள், பிரசார மேடைகளில் ஏனைய கட்சிகளை விமர்சித்தவர்கள் எந்தப் பொறுப்பில் இருந்தாலும் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்க தீர்மானித்துள்ளேன் - என்றார். (ஐ)

## வடக்கு...

கரிநாள் என்று பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு பேரணி ஒன்றுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே நாளைய தினம் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கரிநாளான நாளைய தினம் வர்த்தக சமூகத்தினர், கடற்றொழிலாளர்கள், தனியார் மற்றும் அரச பேருந்து உட்பட அனைத்து தொழில் சங்கங்களையும் தொழில்களை புறக்கணித்தும் திரையரங்குகளை மூடியும் ஹர்த்தாலுக்கு பூரணமாக ஆதரவளிக்க வேண்டும்.

மேலும், வீடுகள், வர்த்தக நிலையங்கள், கல்வி நிலையங்கள், தொழில் இடங்களில் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டு காலாகாலமாக நாம் சிங்கள - பௌத்த பேரினவாத அடக்கு முறைக்கும், ஆக்கிரமிப்புக்கு எதிராக தமிழர் தேசமாக முன்னெடுக்கும் போராட்டத்தில் இணைத்து கொள்ளுமாறும் கேட்டு கொள்கின்றோம் - என்றும் தெரிவித்தனர். (ஐ)

## தமிழரசின்...

மாகாண சபை முன்னாள் அமைச்சருமான கி. துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் நான்கு பேரை தவிர அனைவரும் தனித்துப் போட்டியிட வேண்டும் என்றனர். அப்போது தனித்து அல்ல, தனித்தனியே போட்டியிட வேண்டும் என்ற விடயமும் வலியுறுத்தப்பட்டது.

இதனை தோழமை கட்சிகளுக்கு சொல்ல வேண்டும். மூன்று கட்சிகளும் மூன்று சின்னங்களில் போட்டியிட வேண்டும். மூன்று கட்சிகளும் ஒன்றாக சேர்ந்து பரப்புரை செய்ய வேண்டும். மூன்று கட்சிகளில் உங்களுக்கு விருப்பமான ஒருவருக்கு வாக்கு போடலாம் என்று பிரசாரம் செய்ய வேண்டும்.

நாங்கள் வேறுவேறாக இருந்தாலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற பிணைப்பு எங்களுக்குள் இருக்கின்றது என்ற அடிப்படையில் இந்தத் தேர்தலை முகங்கொடுத்து வெற்றியீட்ட வேண்டும் என்றே சொன்னோம்.

ஆனால், அது நடந்ததா என்று தெரியவில்லை. அது நடக்க முன்னேர அவர்கள் பிரிந்து விட்டார்கள். புதிய கூட்டமைப்பு உருவானதையிட்டு வருந்துகிறோம் என்றும் கூறினார். (ஐ)

## இன்றுவரை...

பிரீத்தி பத்மன் சூரசேன, யசந்த கோதாகொட மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உயர்தரப் பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில், மின்தடை அமுலாக்கப்படமாட்டாது என மின்சக்தி அமைச்சின் செயலாளர் மற்றும் மின்சார சபை உள்ளிட்ட தரப்பினர் வழங்கிய வாக்குறுதி மீறப்படுகின்றமை தொடர்பில், மனித உரிமைகள் ஆணைக்குழு குறித்த மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், இந்த மனு தொடர்பில், தமது கட்சிக்காரர்கள் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக, கால அவகாசம் வேண்டும் என மின்சார சபை உள்ளிட்ட தரப்பினர் சார்பில், மன்றில் முன்னிலையான சட்டத்தரணி கோரிக்கை விடுத்தார்.

இதற்கமைய, குறித்த மனுவை இன்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு அழைக்குமாறு சட்டத்தரணிகள் மன்றில் கோரியுள்ளனர்.

இந்த நிலையில், இன்று வரை, மின்தடை அமுலாக்கப்படமாட்டாது என்ற உறுதிப்பாட்டை இலங்கை மின்சார சபை உயர்நீதிமன்றில் வழங்கியுள்ளது. (அ)

## இனத்தை...

மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

நேற்று வவுனியாவில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிரசாரம் ஒன்றில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இது ஒர் உள்ளூராட்சி தேர்தலாக இருந்தாலும் இந்த சூழலை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். போர் முடிவடைந்து 14 வருடங்கள் கடக்கின்ற நிலையிலும் பொருளாதார ரீதியாகவோ - அரசியல் ரீதியாகவோ எந்தவிதமான முன்னேற்றமும் தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை. போர் குற்றத்துக்கும் தீர்வு கிடைக்கவில்லை. எமது விடயங்கள் சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாக இருந்தாலும் பாதிக்கப்பட்ட தரப்பான நாங்கள் முன்னேற்றமடையாமலே இருக்கிறோம்.

எங்களால் தெரிவுசெய்யப்படுகின்ற வர்கள் இந்த படுமோசமான ஏமாற்று வேலைக்கு விலைபோனமையினாலேயே இந்த திருத்தம் பற்றி பலரும் இன்று பேசுகின்றார்கள். இதுவே உண்மை. இதனை நாம் எவ்வாறு மாற்றப்போகின்றோம். இந்தத் தேர்தல் ஊடாக மக்கள் தமது அரசியல் விருப்பத்தை வெளிப்படுத்தவேண்டும்.

இன்று எம்மைத்தவிர, அனைத்து தரப்புக்களும் 13ஆவது திருத்தத்தை ஏற்கும் நிலையிலேயே உள்ளது. நாம் மாத்திரமே கொள்கையளவில் மறுத்து நிற்கின்றோம் - என்றார். (ஐ-7)

## அரச...

தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை குறைத்துக்கொள்ளும் நோக்கில், மீண்டெழும் செலவை 6 வீதத்தால் இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. இதன் அடிப்படையிலேயே இந்த சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த சுற்று நிருபம் அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாணசபைகள், திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், அரச கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

## 13ஆவது...

சியாம் நிகாயா, ராமன்ஞ நிகாயா, அமரபுர நிகாயா ஆகிய பீடங்களின் மகா நாயக்கர்கள் ஒப்பமிட்ட இந்தக் கடிதம் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்தக் கடிதத்தி லேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 13ஆவது அரசமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி தெரி வித்துள்ள கருத்து நாட்டில் சிக்கலை தோற்றுவித்துள்ளது.

"காணி, பொலிஸ் அதிகாரங்கள், புராதன - வரலாற்று சின்னங்கள், மத அமைப்புகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதன் மூலம் நாட்டில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாகும்.

"நாட்டில் ஏற்படக்கூடிய சிக்கல் மற்றும் பாதகமான நிலையை கருத்தில் கொண்டே ஏற்கனவே ஜனாதிபதி பதவியை வகித்தவர்கள் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை தவிர்த்துக்கொண்டனர். மக்களின் இறைமையை பாதுகாக்கும் பொறுப்புள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி, மத்திய அரசாங்கத்தின் இறைமையை சீர்குலைக்கும் இத்தகைய அரசமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றமை, மக்களின் மத்தியில் அதிருப்தி ஏற்படுவதற்கான காரணமாக அமையும்.

"நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியினால் பிராந்திய, உலக வல்லரசுகளின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கான சில நிபந்தனைகளுக்கு இணக்கம் தெரிவிக்குமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டாலும், நாட்டின் ஒருமைப்பாடு, சுயாதீனத்தன்மையை விபத்தில் ஆழ்த்தும் இத்தகைய பிரேரணைகளை நிராகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

## அநுரவுடன்...

சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அத்துடன், மக்கள் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அநுரகுமார திஸநாயக்க உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தியுடன் சிவில் சமூக உடன்படிக்கைக்கு வரத்தயார். இதற்காக ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற குழு ஒன்று தன்னுடன் இணையவுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

அநுரகுமார திஸநாயக்கவின் அரசியல் மேடைக்கு அருகில் எந்த நேரத்திலும் நடமாட முடியும் என்று இணையம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார். (ஐ)

## நாளைய...

முன்னெடுக்கும் இந்த எழுச்சிப் பேரணியில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

இதேநேரம் பேரணி ஆரம்பமாகி பயணிக்கும் இடங்களையும் வெளியிட்ட மாணவர்கள் அந்தப் பகுதிகளில் பெருந்திரளாக மக்கள் திரண்டு ஆதரவு அளிக்குமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.

**பேரணி ஆரம்பமும் பயணமும்**

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும். நாச்சிமார் கோயிலடி ஊடாக பிரதான தபால் அலுவலகம் தமிழாராய்ச்சி மண்டபம், மணிக்கூட்டுக் கோபுரம், ஆஸ்பத்திரி வீதி வழியாக கச்சேரியடியை வந்தடைந்து பின்னர் செம்மணியை சென்றடையும்.

பின்னர் செம்மணியிலிருந்து வாகனங்கள் மூலம் நாவற்குழி, சாவகச்சேரி, கொடிகாமம், மிருசுவில், பளை, ஆனையிறவு, பரந்தன் ஊடாக கிளிநொச்சியை சென்றடைந்து இரணைடுவில் பேரணியின் முதல் நாள் நிறைவடையும்.

இரண்டாம் நாளான நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பரந்தனில் ஆரம்பமாகும். வவுனியா மன்னார் அணிகளை இணைத்துக் கொண்டு 10.30 மணிக்கு புறப்படும் பேரணி புளியம்பொக்கணை, தர்மபுரம், விசுவமடு, உடையார்கட்டு, மூங்கிலாறு ஊடாக புதுக்குடியிருப்பை அடைந்து அங்கிருந்து முள்ளிவாய்க்கால் சென்று உறுதியெடுத்துக் கொண்டு முல்லைத்தீவில் நிறைவடையும்.

மூன்றாம் நாளான திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு முல்லைத்தீவில் ஆரம்பமாகும் பேரணி தென்னமரவாடியூடாக திருகோணமலையை மதியம் 1.30 மணியளவில் சென்றடையும். பின்னர், திருகோணமலையின் எழுச்சி நிகழ்வுகளில் பேரணியினர் பங்கேற்பர். தொடர்ந்து பயணித்து வெருகலில் மூன்றாம் நாள் நிறைவடையும்.

நான்காம் நாளான செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பேரணி வெருகலிலிருந்து ஆரம்பமாகி வாகரை சென்று அங்கிருந்து மட்டு. நகரை சென்றடையும். இதேநேரம் அம்பாறை மாவட்டத்திலிருந்தும் பேரெழுச்சியாக மக்கள் வந்து இணைந்து மாபெரும் பொது கூட்டத்துடன் எழுச்சிப் பேரணி நிறைவு பெறும்.

இப்பேரணிகளில் மாணவர்கள், மதத் தலைவர்கள், பொதுமக்கள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள், அரசியல் தரப்பினர் அனைவரும் அலை அலையாக இணைந்து தமிழ்த் தேசத்தின் நிலைப்பாட்டை முழு உலகத்துக்கும் வெளிப்படுத்த அணிதிரளுமாறு அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம் - என்று தெரிவித்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ரணிலின் மற்றொரு உத்தரவால் தேர்தல் பணிகளுக்குத் தடங்கல்!

## தேர்தல்கள் ஆணைக்குழு நெருக்கடியில்!

கொழும்பு, பெப். 03

ஜனாதிபதியின் புதிய உத்தரவு காரணமாக தேர்தல் பணிகளுக்கு மற்றுமொரு தடை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல்கள் ஆணைக்குழு தற்போது உள்ளூராட்சி தேர்தலுக்கு தயாராகி வருகிறது.

அரசாங்க தரப்பில் நிதி நெருக்கடி காரணம் கூறப்பட்டு வரும் நிலையில், தேர்தல் தொடர்பான பல்வேறு பணிகளை கடன் அடிப்படையிலேயே மேற்கொள்வதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரச நிறுவனங்கள் கடன் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யக்கூடாது எனவும், உத்தரவை மீறும் அரச அதிகாரிகளே அது தொடர்பான செலவுகளுக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும் எனவும் ஜனாதிபதி கடந்த 31ஆம் திகதி புதிய உத்தரவு பிறப்பித்துள்ளார்.

புதிய உத்தரவு காரணமாக கடன் அடிப்படையில் எரிபொருள் வழங்குதல், அச்சிடுதல் பணிகளை மேற்கொள்வது, அரச உத்தியோகத்தர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வது போன்ற தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு மற்றுமொரு தடை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை நடந்த ஒவ்வொரு தேர்தலிலும், தேர்தல் ஆணைக்குழு கடன் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்து, அது தொடர்பான பணம் அவ்வப்போது விடுவிக்கப்பட்டு வருகின்றது.

உள்ளூராட்சித் தேர்தலை இலக்காக கொண்டு ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்ததாக அரசியல் வட்டாரங்களில் சந்தேகிக்கப்படுகிறது. (அ)

# பயங்கரவாத சட்டத்துக்கு பதிலாக புதிய தேசிய பாதுகாப்புச் சட்டம்!

## ஜெனிவாவில் கூறினார் அலி சப்ரி



கொழும்பு, பெப். 03

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக புதிய தேசிய பாதுகாப்புச் சட்டத்தை உருவாக்கும் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளன என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 42ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான உலகளாவிய காலமுறை மீளாய்வு அறிக்கையை சமர்ப்பிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை தொடர்பான மனித உரிமை அறிக்கை தொடர்பில் கருத்து தெரிவித்த பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு இலங்கை செயற்பட வேண்டுமென குறிப்பிட்டனர். (அ)

# தலாய் லாமா அழைக்கப்பட்டால் சீன-இலங்கை நல்லுறவு முறியும்!

## அச்சமடைகின்றது பீஜிங்

புதுடில்லி, பெப். 03

தலாய் லாமாவுக்கு இலங்கை பௌத்த பிக்குகள் விடுத்த அழைப்பிற்கு சீன அரசாங்கம் வழங்கிய பதிலானது, திபெத்திய தலைவருக்கு எதிராக பீஜிங்கின் அச்சத்தை மீண்டும் அடிக்கோடிட்டு காட்டுவதாக இந்திய செய்தித்தளமான த டிப்ளொமெற் தெரிவித்துள்ளது.

டிசெம்பர் 29-31 திகதிகளில் இந்தியாவில் உள்ள புத்தகாயவுக்கு சென்றிருந்த இலங்கையின் பௌத்த பிக்குகள் தலாய் லாமாவை இலங்கைக்கு வருமாறு அழைத்தனர்.

இதனையடுத்து கொழும்பில் உள்ள சீன இராஜதந்திரிகள் மல்வத்து பிரிவின் மகாநாயக்க தேரரை சந்தித்து, தலாய் லாமாவின் இலங்கைப் பயணத்துக்கு தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

தொற்றுநோய் மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது, இலங்கைக்கு சீனாவின் உறுதியான ஆதரவை இதன்போது நினைவுபடுத்திய சீன அதிகாரிகள், தலாய் லாமாவின் வருகையைத் தடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டதாக த டிப்ளொமெற் குறிப்பிட்டுள்ளது.

சீன - இலங்கை வரலாற்று உறவுகள் சேதமடையாமல் பாதுகாக்க இது அவசியம் என்றும் அவர்கள், மல்வத்து மகாநாயகரிடம் குறிப்பிட்டுள்ளனர். இந்தநிலையில் குறித்த செய்தி தெளிவாக இருந்தது.

தலாய் லாமாவை இலங்கைக்கு வருமாறு விடுத்த அழைப்பை திரும்பப் பெறாவிட்டால் கடனில் சிக்கியுள்ள மற்றும் நம்பியிருக்கும் இலங்கையுடனான சீனாவின் உறவுகள் சேதமடைந்துவிடும் என்பதையே சீன அதிகாரிகள், இதன் போது சுட்டிக்காட்டியதாக த டிப்ளொமெற் கூறியுள்ளது.

தலாய் லாமாவை வரவேற்கும் நாடுகளை சீனா தண்டிக்கும் செயற்பாடு முன்னரும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2016 நவம்பரில் திபெத்தியத் தலைவர் மங்கோலியாவுக்குச் சென்றபோது, அந்த நாட்டுக்கு எதிராக பொருளாதாரத் தடையை விதித்து சீனா பதிலடி கொடுத்தது.

முன்னதாகவும் தலாய் லாமா விடயத்தில், சீனா, இலங்கைக்கு அழுத்தத்தை கொடுத்ததாக டிப்ளொமெற் குறிப்பிட்டுள்ளது. (அ)

# யாழில் 24 மணி நேரத்தில் 118.5 மில்லி மீற்றர் மழை!

யாழ்ப்பாணம், பெப். 03

யாழ். மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 118.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் திருகோணமலையின் சீனன்குடாவுக்கும் உப்புவெளிக்கும் இடைப்பட்ட பகுதியினூடாக கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

நேற்று முன் தினம் காலை முதல் நேற்று காலை வரையான கடந்த 24 மணி நேரத்திற்குள் யாழ் மாவட்டத்தில் 118.5 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கப் பெற்றுள்ளது.

தற்போது வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கிடைத்து வரும் மழை நாளை சனிக்கிழமை வரை தொடரும்.

மேலும் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் தற்போது காற்றின் வேகம் மணிக்கு 35 கி.மீ வேகத்தில் வீசுகின்றது. இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் கரையைக் கடக்கும்போது காற்றின் வேகம் மேலும் அதிகரிக்கலாம்.

வடக்கு மக்கள் தொடர்ந்து அவதானமாக இருப்பது அவசியம் - என்றார். (அ)

# ‘13’ தொடர்பில் ஜனாதிபதி 08 ஆம் திகதி விசேட உரை!

கொழும்பு, பெப். 03

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் உட்பட அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளார்.

9 ஆவது பாராளுமன்றத்தின் 4 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 8 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்படும்.

அன்றைய தினம் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மட்டும் இடம்பெறும். அவ்வுரையின்போதே 13 ஆவது திருத்தச்சட்டம் உட்பட அதிகாரப்பகிர்வு சம்பந்தமாகவும் ஜனாதிபதி கருத்து வெளியிடவுள்ளார்.

சர்வகட்சி தலைவர்கள் கூட்டத்தில் வெளியிடப்பட்ட கருத்துகள் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாக வைத்தே ஜனாதிபதியின் உரை அமையும் என தெரியவருகின்றது.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டியது தனது கடப்பாடாகும் என ஜனாதிபதி அண்மையில் அறிவித்திருந்தார்.

அரசமைப்பில் உள்ள விடயத்தை தன்னால் மீற முடியாது எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்புக்கு சிங்கள தேசியவாத அமைப்புகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# சுதந்திரதின நிகழ்வில் பங்கேற்க இந்திய அமைச்சர் வருகின்றார்

புதுடில்லி, பெப். 03

இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வி. முரளீதரன் இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக நாளை சனிக்கிழமை கொழும்புக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என இந்திய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார இராஜாங்கஅமைச்சர் இலங்கையின் சுதந்திரதின நிகழ்வுகளில் இந்தியாவை பிரதிநிதித்துவம் செய்வார் என இந்திய ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

ஒரு மாத காலத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் இரண்டாவது உயர்மட்ட பிரதிநிதியாக முரளீதரன் விளங்குவார் என தெரிவித்துள்ள இந்திய ஊடகம், இந்திய வெளிவிவகார அமைச்சரின் விஜயம் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அவர் ஆதரவு வெளியிட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு, பூட்டான் ஆகிய நாடுகளின் இராஜாங்க அமைச்சர்களும் சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

# மதுபானச்சாலைகள் இரு நாள்கள் பூட்டு!

கொழும்பு, பெப். 03

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள மதுபானச்சாலைகளை மூட தீர்மானித்துள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாளை சனிக்கிழமை, பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாளை மறுதினமும் அனைத்து மதுபானச்சாலைகளும் மூடப்படவுள்ளன. (அ)

# மட்டு. நீதிமன்றத்திலிருந்து கைதி ஒருவர் தப்பி ஓட்டம்!

மட்டக்களப்பு, பெப். 03

மட்டக்களப்பு நீதிமன்றத்தில் இருந்து கைதி ஒருவர் நீதிமன்ற சுவரைப் பாய்ந்து தப்பி ஓடிய சம்பவம் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றதாக பொலிசார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள கருவப்பங்கேணி பிரதேசத்தில் கஞ்சாவுடன் நேற்று முன்தினம் ஒருரை கைது செய்த பொலிஸார் அவரை சம்பவ தினமான நேற்று பகல் 12 மணியளவில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த கொண்டு சென்று கைதியின் விலங்கை கழற்றியபோது அவர் அங்கிருந்து ஓடி தப்பியுள்ளார்.

இதனையடுத்து தப்பி ஓடிய நபரை கைது செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.